


السلام علی الحسین
و علی علی بن الحسین
و علی اولاد الحسین
و علی اصحاب الحسین
منظوم
حسین

www.bookshia.com
knowledge enlivens the soul

# كـــربلاء

# கர்பலா

ஸபீர் ஹாபிஸ்

வெளியீடு:
இஸ்லாமிய உயர் கல்விக்கான நிறுவனம்
கொழும்பு, ஸ்ரீலங்கா

www.bookshia.com
knowledge enlivens the soul

**நூற் தலைப்பு: கர்பலா**

**ஆசிரியர்: ஸபீர் ஹாபிஸ்**

**வெளியீடு: இஸ்லாமிய உயர் கல்விக்கான நிறுவனம், கொழும்பு**

**முதற்பதிப்பு: 2008 டிசம்பர்**

**பிரதிகள்: 1000**

## சமர்ப்பணம்:

**இமாம் ஹுஸைனுக்கும் அவர்களுடன் ஷஹீதான அவர்களது தோழர்கள் மற்றும் உறவினர்களுக்கும்**

# முன்னுரை

*தியாகச் செம்மல் இமாம் ஹுஸைன் (அலை) அவர்கள், ஹிஜ்ரி நான்காம் வருடம் ஷஃபான் மாதம் 14ம் நாள் மதீனாவில் பிறந்தார்கள். உலகத் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பாட்டனாராகவும், அறிவின் நுழைவாயில் இமாம் அலீ (அலை) அவர்களைத் தந்தையாகவும், சுவனத்தலைவி ஹஸ்ரத் பாத்திமா (அலை) அவர்களைத் தாயாகவும், சுவனத்து வாலிபத் தலைவர் இமாம் ஹஸன் (அலை) அவர்களைச் சகோதரராகவும் கொண்டிருந்தமை இமாம் ஹுஸைன் அவர்களின் பிரத்தியேகச் சிறப்பம்சமாகும்.*

*பாவங்களிலிருந்தும் அழுக்குகளிலிருந்தும் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் என அகில உலக இரட்சகன் அல்லாஹ்வினால் பிரகடனப் படுத்தப்பட்ட அஹ்லுல்பைத் உறுப்பினர்களின் அரிய வழிகாட்டலில், குழந்தைப் பருவத்திலிருந்தே ஒழுக்கமும், அறிவுத்திறனும், பன்முக ஆளுமையும், தணியாத வீரமும் கொண்ட சிறந்த மனித குல முன்னோடியாக இமாம் ஹுஸைன் அவர்கள் வளர்ந்தார்கள்.*

*ஏழாவது வயதில் பாட்டனாரையும், எட்டாவது வயதில் தாயையும், 47ஆவது வயதில் தந்தையையும், 57ஆவது வயதில் சகோதரரையும் இழந்த பின், முஸ்லிம் சமூகத்தைத் தலைமை தாங்க வேண்டிய இமாமத் பொறுப்பு இமாம் ஹுஸைனைச் சேர்ந்தது. ஆனாலும், அவர்கள் தமது பொறுப்பைச் சரிவர நிறைவேற்றுவதைத் தடுக்கும் பல்வேறு முட்டுக்கட்டைகள் அவர்களது வாழ்வில் தோன்றின. அதில் மிகப் பிரதானமானது, உமையா கலீபாவாக அமர்த்தப்பட்டிருந்த யஸீதின் முறையற்ற அதிகார இருப்பும், அதிகாரத் துஷ்பிரயோகமுமாகும்.*

*இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைகளுக்கு முற்றிலும் முரணான தோற்றப் பண்புகளையும் நடைமுறைப் பண்புகளையும் கொண்ட யஸீதின் ஆட்சியை இமாம் ஹுஸைன் அவர்கள் நிராகரித்தார்கள். அவர்களது நிராகரிப்பு முழுமையானதும் அவசியமானதுமான சமயவாத நியாயத்தைக் கொண்டிருந்தது.*

இஸ்லாத்தையும், முஸ்லிம் சமூகத்தையும் தோற்றுவித்த நபி (ஸல்) அவர்களினால் தலைவராக நியமிக்கப்பட்ட இமாம் ஹுஸைன் அவர்கள், தமக்குரிய தலைமைத்துவத்தைச் சூழ்ச்சிகளினால் பறித்து வைத்துக் கொண்டுள்ள யஸீதை, தமக்கும் தாம் சார்ந்த சமூகத்துக்குமுரிய தலைவராக ஏற்றுக் கொள்ள முடியுமா? அவ்வாறு ஏற்றுக் கொண்டால், அது நபி (ஸல்) அவர்களின் கட்டளையை மீறும் பெரும்பாவச் செயலாய் அமைந்து விடாதா?

இமாம் ஹுஸைனின் இஸ்லாம் புரட்சிகர இஸ்லாமாகும். அதிகாரக் கொடுங்கோலர்கள் அட்டூழியத்தையும் பாவச் செயல்களையும் கட்டவிழ்த்து விடும்போது, அதை வாய்மூடிப் பார்த்துக் கொண்டிருப்பதற்கு அவர்களது புரட்சிகர உணர்வும், சமயக் கடமையும் இடங்கொடாது. அதனால்தான், இமாமவர்கள் ஓர் இஸ்லாமியப் புரட்சியை மேற்கொண்டார்கள்.

கர்பலாவின் கொதிமணல் உறிஞ்சிக் கொண்ட இமாம் ஹுஸைனின் உதிரத்துளிகளிலிருந்து, அவர்கள் தொடக்கி வைத்த இஸ்லாமியப் புரட்சி, அதற்குப் பின்னர் தோன்றிய வெவ்வேறு கால கட்டங்களில், முஸ்லிம் சமூகத்திற்கு அனுகூலமான பல்வேறு தாக்கங்களைப் பதிவு செய்து வந்துள்ளது. அவ்வகையில், இமாம் ஹுஸைனின் இஸ்லாமியப் புரட்சியானது, சர்வதேச முஸ்லிம் சமூகத்திற்கு பல்துறை அபிவிருத்திக்கான சாத்தியங்களை ஏற்படுத்தவும், சமய வாழ்வின் தூய்மையைக் கட்டிக்காக்கவும் தோற்றுவிக்கப்பட்ட சிறந்த வாழ்க்கைச் சாதனமாக மிளிர்கின்றது எனலாம்.

முஹர்ரம் மாதம், இஸ்லாமிய வரலாற்றின் பல்வேறு வெற்றிச் சரித்திரங்களைப் பதிவு செய்துள்ள போதிலும், அவற்றின் மகிழ்ச்சியை விடப் பெறுமதியான சோகத்தைத் திணிக்கும் கர்பலாத் துயரத்தையும் தன் வரலாற்று நீரோட்டத்தில் அழுத்தி வைத்துள்ளது. முஸ்லிம்கள் தமது ஒவ்வொரு வருடத் தொடக்கத்திலும் தம்மைப் பட்டை தீட்டிக் கொள்ளவும், தமது சூழலின் அழுக்கை நீக்கித் தூய்மையை ஏற்படுத்திக் கொள்ளவும் பொருத்தமான சந்தர்ப்பத்தினை இந்த முஹர்ரம் மாதம் ஏற்படுத்திக் கொடுப்பதற்குப் பிரதான களமாய் அமைவது, இமாம் ஹுஸைனின் இஸ்லாமியப் புரட்சியும் அது பதிவிறங்கிய கர்பலாக் களமுமாகும் எனில் அது மிகையன்று.

இந்தப் பின்புலத்தைப் பலமாகக் கொண்டு உருவாக்கப்பட்டதே, உங்கள் கைகளில் தவழும் இந்த “கர்பலா” சஞ்சிகையாகும். இமாம் ஹுஸைனின் இயக்கத்தின் பன்முகத் தன்மையையும் விரிவான ஆளுமையையும் பதிவு செய்யும் நோக்கிலமைந்த இச்சஞ்சிகை, இலங்கை முஸ்லிம்களின் சமய வாழ்வணுகுமுறைகளில் துடிப்பையும்

*உயிரோட்டத்தையும் ஏற்படுத்தும் செழிப்பான வித்தொன்றின் தோன்றலாய் அமையும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.*

*மிகக் குறுகிய கால இடைவெளிக்குள் பூர்த்தி செய்யப்பட்ட பணியாயினும், முடியுமானவரை, வாசகர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் சிறந்த ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகின்றமை இச்சஞ்சிகையின் சிறப்பம்சமாகும்.*

*எல்லாம் வல்ல அல்லாஹ் எமது பணிகளில் வெற்றி யையும் பயன்பாட்டையும் நிறைத்தருள்வானாக!*

**ஸபீர் ஹாபிஸ்**

# (01)

# உயிர்த்தியாகிகளின் தலைவர் இமாம் ஹுஸைன் (அலை)

இஸ்லாமிய வரலாற்றில் என்றும் மறக்க முடியாத திருப்பெயர் இமாம் ஹுஸைன் எனும் பெயராகும். சோகமான சரித்திரத்தினூடாக இம்மை மறுமை சார்ந்த மகிழ்ச்சியான வாழ்வுக்கு வழிகாட்டிய பெருமைக்குரிய அற்புத வரலாறுடையவராக அவர் விளங்குகின்றார்.

ஹுஸைன் என்பவர் உண்மையில் யார்? இப்புறநடையான தனித்துவத்துக்கும் பெரும் மானிட ஆளுமைக்கும் பின்னணியாக விளங்குவது யாது? வரலாற்றுப் புகழ்மிக்க இம்மாமனிதர், வீரகாவியங்களின் வரலாறாகவும், பெருமைக்கும் மேன்மைக்கும் உரிய சொல்லாகவும் விளங்குவதோடு, முஹம்மது (ஸல்) அவர்களின் பேரராகவும், அண்ணல் நபியின் மகளார் பாத்திமா (அலை) அவர்களின் திருப்புதல்வராகவும், அன்னாரின் மைத்துனரும் நம்பிக்கையாளர்களின் வீரத்தளபதியுமான இமாம் அலீ (அலை) அவர்களின் தவப்புதல்வராகவும் விளங்குகின்றார்.

நபி (ஸல்) அவர்கள் தமது திருக்கரங்களினால் இவரையும் இவரின் மூத்த சகோதரர் இமாம் ஹஸன் (அலை) அவர்களையும் வாரியணைத்துத் தூக்கிக் கொள்ளும் வேளைகளில் தமது தோழர்களின் முன்னிலையில் பின்வருமாறு கூறுவதுண்டு: "ஓ.... அல்லாஹ்! இவர்களையும், இவர்களை நேசிப்பவர்களையும் நான் நேசிக்கிறேன்"

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பின்வரும் வார்த்தைகளில் ஹஸன், ஹுஸைன் மீதான தமது ஆழ்ந்த நேசத்தையும் பாசத்தையும் வெளிப்படுத்தினார்கள். "எனது இவ்விரு பேரக்குழந்தைகளும், இவ்வுலகில் எனது இனிய நறுமணச்செடிகளாகும்"

"ஹஸனையும் ஹுஸைனையும் நேசிப்பவர் யாரோ, அவர் என்னை நேசிப்பவராவார். அவர்களை வெறுப்பவர் யாரோ அவர் என்னை வெறுப்பவராவார்"

இச்சிறுவர்கள் இருவரும் ஒருவர் மாறி ஒருவராக புனித நபிகளாரின் தோளில் ஏறி தமது பாதங்களைப் பரப்பி அமர்ந்திருந்த

போதிலுங்கூட நபிகள் (ஸல்) அவர்கள் தமது பிரார்த்தனையை நிறைவேற்றினார்கள். அண்ணலின் தோழர்களிற் சிலர், அக்குழந்தைகளை அங்கிருந்து அகற்ற முயற்சித்த போதெல்லாம், கருணை நபி மறுப்புத் தெரிவித்தபடி இவ்வாறு கூறுவார்கள்:

“அவர்களை விட்டு விடுங்கள்; எனது தந்தையும் தாயுமே இவர்களுக்குரிய கிரயமாகும். என்னை நேசிப்பவர் இவர்களையும் நேசிக்க வேண்டும்”

“சுவர்க்கத்தில் உள்ள மக்களில் ஒருவரைக் கண்டு மகிழ்ச்சியடைய யார் விரும்புகின்றாரோ, அவர் ஹுஸைனைக் கண்டு கொள்ளட்டும்”

இவ்வாறாக, இமாம் ஹுஸைன் (அலை) அவர்கள் சிறு பராயத்தினராய் இருக்கும் போதே வீரத்தியாகியாக முஸ்லிம் உம்மாஹ்வினருக்கு அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டார். இவருக்கு முஸ்லிம் உம்மாஹ் தீங்கு ஏதும் செய்து விடாதவாறு, இவரின் அந்தஸ்து முன்கூட்டியே இறைத்தூதரினால் அடையாளங் காணப்பட்டது.

தசாப்தங்கள் சென்று கழிந்தன. ஹுஸைனின் உயரிய அந்தஸ்து நிலை சம்பந்தமாக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மொழிந்தவைகளை, இறைகட்டளைக்குக் கீழ்ப்படியாதோர் மறுத்தனர். அவர்கள் அல்லாஹ்வின் தூதருடைய பேரப்பிள்ளைகளைக் கொடூரமாகக் கொலை செய்ததினால், அத்திருத்தூதருக்கே அவர்கள் துன்பமிழைத்து விட்டனர்.

முஸ்லிம்களுக்கு இதனையிட்டு இப்னு உமர் கூறியதாகக் குறிப்பிடும் குறிப்பொன்றின் படி; “ஒரு நாள் அவரிடம் ஹஜ் யாத்திரை பற்றி வினவப்பட்ட போது, கொசுக்களைக் கொல்வது அனுமதிக்கப்பட்டுள்ளதா எனவும் வினவப்பட்டார். அப்போது அவர் கடுமையாகப் பதிலிறுத்தார்: என்னிடம் ஈராக்கைச் சேர்ந்த மக்கள் ஹஜ்ஜின் போது கொசுக்களைக் கொல்வது பற்றிக் கேட்கின்ற அதேவேளையில், அவர்கள், அல்லாஹ்வின் தூதருடைய திருப்புதல்வியின் புதல்வரைக் கொன்று விட்டனரே. அவர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது திருத்தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இவ்வுலகில் எனது இரண்டு இனிய நறுஞ்செடிகளாகும்”

வரலாறானது அனஸ் பின் மாலிக் ஒப்பிட்டுக் காட்டிய இரண்டு நிகழ்ச்சிகளிலிருந்து எடுத்த மற்றோர் உன்னதக் காட்சியை நமக்கு வழங்குகின்றது. அவற்றுள் முதலாவது அல்லாஹ்வின் தூதர் தனது பேரர் ஹுஸைனை ஆரத்தழுவி அதரத்தில் முத்தமிட்ட காட்சியாகும். இரண்டாவது கூபாவின் உமையா ஆளுநரான இப்னு சியாத் என்பவன், இமாம் ஹுஸைன் அவர்களின் உயிர்த்தியாகத்தைத்

*தொடர்ந்து, தட்டொன்றில் வைக்கப்பட்டிருந்த ஹுஸைனுடைய துண்டிக்கப்பட்ட தலையைத் தடவிய காட்சியாகும். இது பற்றி அன்னார் அறிவிப்பதாவது;*

*ஹுஸைன் பின் அலீ (அலை) அவர்களின் படுகொலையின் பின்னர் அன்னாரின் துண்டிக்கப்பட்ட தலை, இப்னு சியாதிடம் கொண்டு செல்லப்பட்ட போது, அவன் தனது கைப்பிரம்பினால் தலையின் வாய்ப்பகுதிக்குள் நுழைத்து பற்களைச் சுட்டிக்காட்டி இவர் நல்ல தோற்றமுடையவராக இருந்திருக்கிறாரே என்று கூறினான். அப்போது நான் பின்வருமாறு கூறினேன். இந்த வாயில் நீ பிரம்பை நுழைத்த இடத்திலேயே அல்லாஹ்வின் தூதர் முத்தமிட்டதை நான் கண்டுள்ளேன்"*

*அபூபக்கர் சித்தீக் அவர்கள் பின்வருமாறு மொழிந்தார்கள்: "அல்லாஹ்வின் தூதர் இவ்வாறு கூறியதை நான் கேட்டிருக்கிறேன். ஹஸனும் ஹுஸைனும் சொர்க்கத்து வாலிபர்களின் இரண்டு தளபதிகளாவர்"*

*இவ்வாறு ஹுஸைன் (அலை) அவர்கள் இறைத்தூதரின் உள்ளத்திலே இடம்பெற்று, புனித அருள்வாக்கினால் வர்ணிக்கப்பட்டு, புனிதமிக்கதும் மிக மேன்மை வாய்ந்ததுமான நபிகளாரின் இஸ்லாமிய இல்லத்திலே வளர்க்கப்பட்டார். ஹுஸைன் (அலை) அவர்கள் சீரிய பண்புகளையும் நற்குண நல்லொழுக்கங்களையும் சிறந்த குறிக்கோள்களையும் தன்னகத்தே கொண்டிருந்ததினால், விசுவாசம், துறவு, வழிபாடு என்பவற்றின் முன்னுதாரணமாகவும் இறைபக்தியின் அடையாளச் சின்னமாகவும் விளங்கினார். இவர் உம்மாஹ்வைப் பாதுகாப்பதில் உறுதியுடையவராகவும் வீரமுடையவராகவும் விளங்கியதுடன் மகோன்னதமான புகழ்பெற்ற ஆளுமையையும் பெற்றிருந்தார். உண்மையின் பால் அவர் உறுதியாக இணைந்து கொண்டதுடன், தெய்வீக சட்டங்களைப் பாதுகாப்பதிலே தணிக்கையாளரின் எவ்விதத் தணிக்கைக்கும் என்றுமே அஞ்சாத, வலிமையான மனோதிடங் கொண்டவராகவும் விளங்கினார்.*

*இவ்வித மேன்மையான இயல்புகள், மதி நுட்பமான ஆளுமை, உன்னதமான சமூக அந்தஸ்து ஆகியவற்றின் காரணமாகவே, இமாம் ஹுஸைன் அவர்கள் இஸ்லாமிய வரலாற்றிலே உற்சாகமுள்ள மாபெரும் சக்தியாக விதிக்கப்பட்டார்கள். இவரின் வாழ்க்கை, எல்லாச் சந்ததியினர் மீதும் அழியாதவோர் அடையாளத்தை விட்டுச் செல்லும் மிகப் பிரகாசமான மரண சாசனமாகும். இக்கீர்த்தி, மானிட வர்க்கத்தின் உண்மையான மதிப்பையும் கொள்கைச் சிறப்பையும் பெறுமானத்தையும் அறிகின்ற சுதந்திரத்தை நேசிக்கும் ஒவ்வொரு தனி மனிதனின் உள்ளத்திலும் ஹுஸைன் (அலை) அவர்களின்*

முகத்தோற்றத்தைப் புனிதமாக்கி வைத்துள்ளது. முஸ்லிம்கள் நபிகளாரின் திருக்குடும்பத்தினரை நேசித்தார்கள். இத்திருக்குடும்பத்திலிருந்து வந்த இமாம்களில் ஒருவராக, ஹுஸைனை மகிமைப்படுத்தினார்கள். இதன் காரணமாக இவரின் உயிரிழப்பு என்னும் கோர சம்பவம், இமாம்களின் மனங்களில் தொடர்ச்சியான மரண வேதனையைத் தூண்டி முடிவில்லாத துயரத்துக்கான ஒரு காரணியாக மாறிற்று.

இக்காரணங்களுக்காகவேதான் இம்மாமனிதர், மக்களின் உள்ளங்களை வென்றார். இவரது காந்த சக்தி உணர்ச்சிகளைப் பொங்கிப் பிரவகிக்கச் செய்ததுடன், பாசத்துடன் உள்ளங்களை இவர் பால் பற்றிக் கொள்ளவும் செய்தது. கடந்த பதிநான்காம் நூற்றாண்டுகளில் பரம்பரை பரம்பரையாக இவரைப் பற்றிப் புலவர்கள் உள்ளத்தைத் தூண்டும் உணர்ச்சி மிக்க செய்யுள்களைப் படைத்தார்கள். இக்குறிப்பிட்ட இலக்கியம், இன்னும் வரண்டுவிடாமல் வசந்த காலத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறது. அத்துன்பியலாலும் தியாகத்தாலும் உண்டாகிய ஆழமான குற்றவுணர்வும் வேதனையும் பற்றி, கவித்துவத்துடனும் கலை நயத்துடனும் வர்ணிக்கப்பட்ட காட்சிகள் இன்னும் உயிரோட்டமுள்ளவையாகவே விளங்கி வருகின்றன.

மக்கள் தொடர்ச்சியாக எழுதினார்கள். ஆனால், மையோ உலர்ந்து விடவில்லை. வெளிப்படுத்திய கருத்துகளும் பழமையாகி விடவில்லை. இவரின் பெயரால் மக்களின் எழுச்சிகள் தொடங்கப் பெற்றன. இரத்தவூற்று பெருக்கெடுத்தோடுவது நின்றுவிடவோ, அந்த மகிமையுள்ள பாதைக்கான எழுச்சியாளரின் மனோதிடம் குலைந்து விடவோ இல்லை. இவரின் பெயரால் கோஷங்களும் சுலோகங்களும் எழுப்பப்பட்டன. அவை இறவாத நிறுவனங்களாக உருமாற்றப்பட்டன. பல்லாயிரக்கணக்கான குரல்கள் எதிரொலிக்கும் பேரெழில் மிக்க மாமனிதர் ஹுஸைனின் எழுச்சிப் பாதையை சீர்குலைத்து விட முடியாது.

இறைத்தூதரின் தசையிலிருந்து புறப்பட்ட இரத்தமே கர்பலாவின் மணற் புழுதி மீது இன்னும் ஓடிக் கொண்டிருக்கிறது என்பதை முஸ்லிம்கள் அறிவார்கள். இஸ்லாத்தின் எதிரிகளைத் தண்டிப்பதாலும், புரட்சியின் பெறுமானங்களைப் புதுப்பிப்பதாலுமேயன்றி ஈடு செய்ய முடியாத மிகக் கொடிய குற்றமொன்று இறைத்தூதர் (ஸல்) அவர்களது திருக்குடும்பத்தார் மீது இழைக்கப்பட்டது. ஆகவே கிளர்ச்சிகள் வெடித்தெழுந்தன. தாம் இழைத்த குற்றங்களுக்காகவும் பாவங்களுக்காகவும் வருந்துவோர் கரங்களில் ஆயுதமேந்தி எழுந்தனர். உமையாக்களின் சிம்மாசனத்தை ஆட்டங்காணச் செய்து அதனை வீழ்த்தி விட்ட ஹுஸைன் (அலை)

அவர்கள் சிந்திய இரத்தம் மாற்றத்துக்குள்ளாகாமல் மாற்றம் நிகழ்த்திக் காட்டிய அற்புதப் பொருளாகும்.

ஹுஸைன் (அலை) அவர்களின் உயிர்த்தியாகம் ஏற்படுத்திய விழிப்புணர்வு, முஸ்லிம்களின் மனச்சாட்சிகளில் தேங்கியிருந்த குற்றவுணர்வையும் தோல்வி மனப்பான்மையையும் நீக்கிச் செப்பனிட்டது. இதன் பலனாக பழிதீர்க்க விழைந்த மனிதர் எழுந்தனர். குற்றவாளிகளைத் தண்டிப்பதற்காகவே அர்ப்பணிக்கப்பட்ட இயக்கங்களும் உருவாக்கப்பட்டன. ஹுஸைனின் படுகொலைக்குப் பழிதீர்த்தவர்களான தவ்வாபீன், அல்முக்தார் ஆகியோரின் ஆயுதப் போராட்டம் அவற்றுக்கு உயிர்கொடுத்தன. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட தொடர்ச்சியான புரட்சிகளும் அவற்றின் எதிரொலிகளும் இன்னும் மடிந்து விடவில்லை.

இமாம் ஹுஸைன் (அலை) அவர்கள் நினைவாக முஸ்லிம்கள் தொடர்ந்து மன்றங்கள் கூடி வந்துள்ளனர். இவர் படுகொலை செய்யப்பட்ட அன்றையத் தினத்திலிருந்து இன்றுவரை இச்சம்பவம் முஸ்லிம்களின் உள்ளங்களில் நீக்கமற நிறைந்துள்ளது. உரத்த குரலில் கேட்கும் அழுகையும் புலம்பலும் இன்னும் ஓய்ந்துவிடவில்லை. கண்களில் வழிந்தோடும் கண்ணீரும் மறைந்து விடவில்லை. இன்னும் மானிட உள்ளங்களில் தெளிவாகத் தெரிகின்ற மனச் சாட்சிகளிடையே உறவாடிக் கொண்டும் உம்மாஹ்வினரின் அறிவார்ந்த நிலையைத் தாக்கமுறச் செய்தும் அதன் துன்பவுணர்வுகளைத் தீவிரமடையவுஞ் செய்கின்றது. அதனை மையமாகக் கொண்டு ஓர் இலக்கிய சிந்தனையாளர் வட்டம் உருவாகியதுடன் 'ஹுஸைன் பாரம்பரியம்' ஒன்றும் பரிணாம வளர்ச்சி பெற்று, துன்பியலைப் போஷித்து வளர்த்தெடுத்து புதுப்பித்து தொடரும் சந்ததியினருக்கு ஓயாது எடுத்துக் கூறிக் கொண்டிருக்கிறது.

இவ்வாறுதான் கர்பலா இருந்தது. கொடுங்கோன்மைக்கு எதிரான புரட்சிக்குரிய மிகப் பிரகாசமான ஒளிவிளக்காகவும், புரட்சியாளரின் அடையாளச் சின்னமாகவும் துயரத்துக்கும் பேரழுகுக்குமான பாதையாகவுமே விளங்குகின்றது. ஒவ்வொரு சுதந்திரப் பெருமகனின் உள்ளத்திலும் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் அன்பு, விசுவாசம் என்பவற்றுக்கான தொடுகல்லே ஹுஸைன் (அலை) என்பவராவார்.

தன்னம்பிக்கைக்குரிய உதாரண புருஷராகவே அன்னார் விளங்கினார். ஒடுக்கப்பட்டோரின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த, விட்டுக்கொடுக்காத ஒரு புரட்சியாளராகும். புனித நபிகளாரின் நெருங்கிய உறவினர்களில் ஒருவரான இவர் மீது அன்பு செலுத்துமாறு இறைவன் நமக்கு பின்வருமாறு

*கட்டளையிடுகின்றான்: "......... (நபியே!) கூறுவீராக. நான் உங்களிடம் அதற்கான வெகுமதி எதனையும் கேட்கவில்லை. ஆனால் எனது நெருங்கிய உறவினர் மீது செலுத்தும் அன்பைத் தவிர. யார் நன்மை சம்பாதிக்கிறாரோ அவருக்கு நாம் மேலும் பல நன்மைகளை வழங்குகின்றோம்" (42:23)*

*அல்லாஹ்வினால் அசுத்தத்திலிருந்து அப்பாற்படுத்தப்பட்ட திரு நபி (ஸல்) அவர்களது குடும்பத்தின் ஓர் உறுப்பினரே ஹுஸைன் (அலை) அவர்கள். "ஓ... அஹ்லுல்பைத்தினரே! உங்களை விட்டும் சகல அசுத்தங்களையும் நீக்கி உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்கி வைக்கவே அல்லாஹ் விரும்புகின்றான்" (33:33)*

*எனவே, இமாம் ஹுஸைன் (அலை) அவர்கள், முஸ்லிம் சமூகத்திற்கான மிகச் சிறந்த முன்னோடியாகவும் இஸ்லாமிய சமய நெறிமுறைகளைப் பூரணமாகப் பின்பற்றியொழுகுவதற்கான தெளிவான வழிகாட்டியாகவும் இருக்கிறார்கள். அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு வாழ்வதில் முஸ்லிம்களின் சமய வாழ்க்கை முழுமையடையும் என்பதில் ஐயமில்லை.*

# (02)

# இமாம்ஹுஸைனும் இஸ்லாமியப் புரட்சியும்

புரட்சி என்பது வரவேற்கத்தக்க ஓர் அபிவிருத்தியாகும். அது பாமர மக்களின் முன்னேற்றத்தையும், சமயப் பெறுமானங்களின் பற்றுறுதியையும் குறிக்கோளாகக் கொண்ட ஒரு மாற்றமாகவும், கல்வி, பொருளாதாரம், நீதி உள்ளிட்ட ஒட்டுமொத்த தேசிய நலன் விருத்தியின் பால் மனித சிந்தனையைத் தூண்டிவிடும் சமூக எழுச்சிக் கூறாகவும் விளங்குகின்றது.

பொதுமக்களின் அபிலாஷைகள் புறக்கணிக்கப்படுகின்ற நிலைமைகளின் போதும், அதிகாரத்திலுள்ள அரசாங்கம் மக்களின் கோரிக்கைகளைச் செவிமடுக்காது, அவர்களது உரிமைகளையும் உணர்வுகளையும் நசுக்க முனைகின்ற நிலைமைகளின் போதும் புரட்சிகள் வெடிக்கின்றன. பொதுமக்களுக்கும் அரசாங்கங்களுக்குமிடையிலான பகைமை உணர்வின் விளைவாக அப்புரட்சிகள் வெற்றியடைகின்றன.

மனிதாபிமானத்தை நோக்காகக் கொண்டு செயல்படும் சுயமரியாதையுள்ள எந்தவோர் ஆராய்ச்சியாளனும் புரட்சிகளின் பக்கமும் புரட்சிவாதிகளின் பக்கமுமே சாய்வான் என்பது இயல்பான உண்மையாகும்.

ஒரு புரட்சியானது, இஸ்லாமிய விரோத செயல்களையும், இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைகளை நிராகரிக்கும் அதிகாரத் துஷ்பிரயோகங்களையும் தடுத்து நிறுத்தவும் அழிக்கவுமான சமயக் கடமையைப் பின்புலமாகக் கொண்டு தோன்றும் போது அது இஸ்லாமியப் புரட்சியாகின்றது.

இஸ்லாமியப் புரட்சி என்பது சர்வதேச மானிட உயர் மாண்புகளுக்கும், உலகாயவாதம், பேராசை, சுயநலம், அகம்பாவம், ஒழுக்கக்கேடு, ஊழல், நயவஞ்சகம் போன்ற மார்க்கம் விலக்கிய தீங்குகளின் போலி மாண்புகளுக்கும் இடையிலான தொடர் போராட்டத்தைப் பிரதிபலிக்கக் கூடிய பாரிய முயற்சியாகும்.

இஸ்லாமியப் புரட்சியின் முக்கியத்துவம், சிந்திக்கும் ஆற்றல் படைத்த மனிதனின் சிதறிய கவனத்தை மானிட வாழ்வின்

அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல் வாய்ந்த ஆன்மீகம் எனும் காரணியின் பக்கம் திருப்புவதில்தான் அடங்கியுள்ளது.

ஓர் இஸ்லாமியப் புரட்சி, முஸ்லிம் உம்மத்தினர் மத்தியில் ஏற்படும் விழிப்புணர்வினாலேயே ஏற்படுகின்றது. இது மேலும் விழிப்பை ஏற்படுத்தி, இஸ்லாமிய உயர் இலட்சியங்களைத் தெளிவாக விளங்கச் செய்வதோடு, முஸ்லிம்களின் உள்ளத்திலே அவர்களின் எதிர்காலத்தைப் பற்றிய ஒரு புது நம்பிக்கையையும் ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்.

பல சகாப்தங்களுக்கு முன்னால், இறைத்தூதரின் பேரர் இமாம் ஹுஸைன் (அலை) அவர்கள், அநீதியான ஆட்சியாளர்களுக்கெதிராகப் போராடி கர்பலாவில் ஷஹீதான போரியல் வரலாறு, இத்தகைய இஸ்லாமியப் புரட்சிகளின் ஆவேசமான ஆரம்பமாகும். கர்பலா சார்ந்த இமாம் ஹுஸைனின் இயக்கத்தின் தன்மைகள், ஒரு முழுமையானதும் புனிதமானதுமான இஸ்லாமியப் புரட்சியின் அனைத்துப் பண்புகளையும் பூர்த்தி செய்து வெளிப்பட்டமை, பிற்கால இஸ்லாமியப் புரட்சிகளுக்கான மிகச் சிறந்த வழிகாட்டலாகவும் முன்மாதிரியாகவும் அது கொள்ளப்படுவதற்குக் காரணமாயிற்று.

இஸ்லாமியப் புரட்சி போன்ற ஒரு புரட்சியில் சித்தாந்தம், தலைமைத்துவம், மக்கள் ஆகிய மூன்று காரணிகள் பங்கு பெறுகின்றன.

சித்தாந்தம் என்பது செயலின் இலக்கைக் குறிப்பதாகும். தத்துவக்கோட்பாடு, இலட்சியம், நோக்கம், குறிக்கோள் போன்ற சொல்லாடல்களையும் இதற்குப் பயன்படுத்தலாம். இமாம் ஹுஸைனின் புரட்சி, மிகத்தூய்மையான ஓர் இலக்கைக் கொண்டிருந்தது. முஆவியாவிலிருந்து ஆரம்பமாகும், இஸ்லாமிய அடிப்படைக் கொள்கை நெறிகளுக்கு முரணான உமையா பரம்பரையினரின் அதிகாரப் பிரயோகத்தை இறைத்தூதர் வலியுறுத்திச் சென்ற தூய இஸ்லாமிய ஆட்சியாக மாற்றியமைப்பது என்பதே அவ் இலக்காகும்.

“நிச்சயமாக நான் குழப்பம் விளைவிக்கவோ, முரண்பாடுகளைத் தோற்றுவிக்கவோ, சண்டைகளை ஏற்படுத்தவோ, அட்டூழியம் புரியவோ முனையவில்லை. எனது பாட்டனாரின் மார்க்கத்தைப் பாதுகாக்கவே நான் புறப்படுகின்றேன். எனது பாட்டனாரும் எனது தந்தையாரும் சென்ற வழியிலேயே நானும் பயணிக்கிறேன்” என இமாம் ஹுஸைன் (அலை) அவர்கள் தமது புரட்சியின் தொடக்க நிலையில் வெளிப்படுத்திய பிரகடனம் அவர்களது தூய இலக்கைத் தெளிவாக விபரிக்கின்றது.

மிகக் குறைந்த எண்ணிக்கையிலான தமது தோழர்கள், உறவினர்கள் அடங்கிய குழுவினரால் பல்லாயிரக்கணக்காகத் திரண்டுள்ள உமையாக்களின் கொட்டத்தை நசுக்கிவிட முடியாது என்பதை இமாம் ஹுஸைன் அவர்கள் தெளிவாக அறிந்திருந்தார்கள். எனினும் தமது புரட்சி, உமையாக்களின் ஆட்சியின் உண்மை நிலையையும், அதில் பொதிந்துள்ள இஸ்லாத்திற்கு முற்றிலும் விரோதமான போக்குகளையும் சர்வதேசத்துக்குத் தெரியப்படுத்தி, அது பற்றிய போதிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டுமென்பதே இமாமவர்களது புரட்சியின் சித்தாந்தமாயிருந்தது. அந்த விழிப்புணர்வு தோன்றிவிட்டால், அது மக்களின் உள்ளங்களில் ஓர் உஷ்ணமாகத் தங்கியிருந்து எதிர்காலத்தில் தோன்றவிருக்கும் பொருத்தமான சந்தர்ப்பத்தில் மிகப் பெரும் புரட்சியாக வெடித்து, உலகம் முழுவதையும் இஸ்லாமிய மயப்படுத்தும் என்பது அவர்களது சித்தாந்தத்தின் இறுதிக் கணிப்பீடாகும்.

தலைமைத்துவம் என்பது அன்றைய சூழலில் இமாம் ஹுஸைனுக்கு மட்டுமுரிய பிரத்தியேகப் பண்பாயிருந்தது. ஏனெனில், "நான் இரண்டு விடயங்களை விட்டுச் செல்கிறேன்; ஒன்று அல்குர்ஆன், மற்றையது எனது குடும்பத்தினரான அஹ்லுல்பைத்" என்ற தமது ஹதீஸின் மூலம், தமக்குப் பின் முஸ்லிம் சமூகத்தின் தலைமைத்துவம் என்பது அஹ்லுல்பைத்தினரையே முழுக்கச் சார்ந்திருக்கும் என்ற சமய அடிப்படைக் கொள்கையை நபி (ஸல்) அவர்கள் தெளிவாக விளக்கி விட்டுச் சென்றார்கள். அஹ்லுல்பைத்தினரில் அப்போதிருந்தவர்களில் முதிர்ந்தவராகவும், தலைமைத்துவ அடையாளங் காட்டப்பட்டவராகவும் இருந்தவர் இமாம் ஹுஸைன் அவர்களே.

கலீபாவாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த யஸீதை விட, அப்பதவிக்கு முற்றிலும் தகுதியும் உரிமையும் உடையவராக இமாம் ஹுஸைன் விளங்கினார்கள். இஸ்லாம் கட்டமைத்த புரட்சிகர மத வாழ்வின் அடையாளச் சின்னம் என்ற தோற்றம் அவர்களது வாழ்க்கையின் ஒவ்வோர் அசைவிலும் வெளிப்பட்டிருந்தது. அவர்களுடன் ஒப்பிடுகையில் முழுமையான எதிரிடைப் பண்பு கொண்டவனாக யஸீத் விளங்கினான். சமயக் கடமைகளைப் புறக்கணித்து, பெரும்பாவச் செயல்களை சர்வசாதாரணமாகச் செய்துவரும் ரௌத்ராகரமான மார்க்க விரோதப்போக்கு அவனில் செறிந்து காணப்பட்டது. முஸ்லிம் சமூகத்தைத் தலைமை தாங்கி வழிநடாத்துவதற்கான மிகக் குறைந்தபட்ச தகுதிகூட அற்றவனாகக் காணப்பட்ட அவனை, கலீபாவாக அங்கீகரிக்க இமாம் ஹுஸைன் அவர்கள் மறுத்துவிட்டார்கள். சமகாலத்தின் இஸ்லாமியத் தலைமைத்துவப் பொறுப்பு தமக்கேயுரியது என்பதை இமாமவர்கள் நன்கறிந்திருந்தார்கள். எனவேதான், அத்தலைமைத்துவத்தை பலவந்தமாகத் தன்னிடம் கைப்பற்றி வைத்துள்ள யஸீதுக்கெதிராக

அவர்கள் குரல் கொடுத்தார்கள். யஸீதுக்கெதிரான முஸ்லிம் சமூகத்தின் உணர்வுகளுக்குத் தலைமை தாங்கும் தம் கடமையை அவர்கள் பூரணமாக நிறைவேற்றினார்கள். இவ்வகையில், இஸ்லாமியப் புரட்சிக்கான தலைமைத்துவப் பங்களிப்பை அவர்கள் பூர்த்தி செய்தார்கள்.

மூன்றாவது காரணியான மக்கள் ஆதரவுக்காகவே, இமாம் ஹுஸைன் அவர்கள் தமது புரட்சியைச் சிறிது காலத்திற்குத் தாமதப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. கூபாவாசிகளிடமிருந்து இமாமவர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் வரத்தொடங்கின. மொத்தமாகப் பதினெட்டாயிரத்துக்கும் அதிகமான கடிதங்கள் வந்து குவிந்தன. ஒவ்வொரு கடிதமும், யஸீதின் முடியாட்சிக்கெதிரான ஆவேச உணர்ச்சிகளையும், இஸ்லாமிய விரோத ஆட்சியைத் தகர்க்க வேண்டியுள்ள கடமைப் பொறுப்பைத் தாம் உணர்ந்துள்ளதை உறுதிப்படுத்தும் வாக்குமூலங்களையும், தமது எதிர்ப்புணர்வுகளுக்கும், எழுச்சிப் போராட்டங்களுக்கும் தலைமை தாங்க வரும்படியான பணிவான வேண்டுகோள்களையும் பதிவு செய்திருந்ததோடு, கூபாவாசிகளில் பெருந்தொகையானோரின் கையொப் பங்களையும் தாங்கியவாறு அவை வந்து கொண்டிருந்தன. இந்நிலையில்தான், ஒரு புரட்சிக்குரிய மூன்றாவது காரணியும் இடம்பெற்று விட்டதை உணர்ந்த இமாம் ஹுஸைன் அவர்கள், தமது தோழர்களையும் உறவினர்களையும அழைத்துக் கொண்டு கூபாவுக்குப் புறப்பட்டார்கள்.

உண்மையில், இமாம் ஹுஸைனின் நோக்கம், யஸீதுடன் நேருக்கு நேர் பொருதிச் சமூகத்தைக் கூறுபோட வேண்டும் என்பதல்ல. மாறாக, யஸீதின் இறைவிரோத ஆட்சி பற்றிய விழிப்புணர்வைத் தோற்றுவித்து, மக்களிடையே பெரும் புரட்சியொன்றுக்கான விதைகளைத் தூவி, நபி (ஸல்) அவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட தூய இஸ்லாமிய ஆட்சியை மீண்டும் உலகில் நிறுவுவதே அவர்களது நோக்கமாயிருந்தது.

இந்த நோக்கின் அடிப்படையில் ஆய்வு செய்யுமிடத்து, இமாம் ஹுஸைனின் இஸ்லாமியப் புரட்சி, மிகப்பெரிய வெற்றி பெற்றது என்பதை உணர முடியும். ஏனெனில், மனித வரலாறு என்றுமே அடக்கியாள்பவர்களுக்கும் கொடுங்கோலர்களுக்கும் எதிரான அடக்கியொடுக்கப்பட்டவர்களதும் நலிந்தோர்களதும் வெற்றியையே உறுதிப்படுத்தி வந்துள்ளது.

இமாம் ஹுஸைனின் இஸ்லாமியப் புரட்சியானது, பல்வேறு ஆளுமைக் குணாம்சங்களின் முழுத்தொகுப்பாகத் தன்னை வெளிப்படுத்தியுள்ளது. ஒடுக்கப்பட்ட, உரிமை மறுக்கப்பட்ட முஸ்லிம்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் போதே, ஒரு

புரட்சி மக்களால் வரவேற்கப்படும். அத்தகைய வரவேற்பை இமாம் ஹுஸைன் அவர்களின் இயக்கமானது, அதன் பூர்வீகம் தொடக்கம் இன்றுவரையும கொண்டிருக்கிறது; உலக முடிவு வரை கொண்டிருக்கும் என்பதிலும் ஐயமில்லை.

சத்தியத்துக்கும் அசத்தியத்துக்கும் இடையிலான போராட்டமானது படைப்பினங்களின் தோற்றத்தோடு தோன்றி வளர்ந்த ஒரு வாழ்க்கை முரணுண்மையாகும். அதன் தொடர்ச்சியை இமாம் ஹுஸைனின் புரட்சி சார்ந்த கொள்கைப் பிரகடனங்களிலும் காண முடிகிறது. இமாமவர்களது புரட்சியை குறுகிய அரசியல் வரையறைகளுக்கு உட்படுத்தி, அவர்களது இயக்கப்பாட்டின் உணர்வுபூர்வமான மதப்பற்றுறுதி மக்களை அண்டவிடாது தடுப்பதற்கு, இத்தகைய அசத்தியக் குழுக்கள் தொடர்ந்தும் மூர்க்கத்தனமாய்ப் போராடி வருகின்றன. அவர்களது போராட்டங்கள் வெற்றிக்கான சமிக்ஞைகளை அவர்களுக்குக் காண்பித்தாலும், இறுதியில் அசத்தியம் தோற்றுத் துவழ, சத்தியமே வெற்றி பெற்று நிலைக்கும் என்ற உண்மையை அவர்களுக்கு நினைவுபடுத்திக் கொள்ள விரும்புகின்றோம்.

ஒரு புரட்சி, குறிப்பாக அது உலகெங்கும் வாழும் மக்களின் பொதுவான துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் எதிரானதாக இருந்தால், அம்மக்கள் மீதான அதன் பாதிப்பு தவிர்க்க முடியாததாக இருக்கும் என்பது உறுதி. இமாம் ஹுஸைனின் புரட்சியின் பெறுமானங்களை உணர்ந்து, அதனை அடியொற்றித் தம் தனிப்பட்ட வாழ்வையும், அரசியல் உள்ளிட்ட பொது வாழ்வையும் நெறிப்படுத்திக் கொள்ளத் தயாராகவும், நெறிப்படுத்தி வெற்றி பெற்றும் பல கோடி மக்கள் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களது இருப்பும், தனிமனித - சமூக வாழ்வில் அவர்கள் குவித்து வரும் ஆன்மீக இலௌகீக அபிவிருத்தியும் இமாம் ஹுஸைன் அவர்களின் இஸ்லாமியப் புரட்சியின் சர்வதேசத்தரமும் பன்முகத்தன்மையும் வாய்ந்த பாரிய வெற்றிக்கான நிதர்சனமான மூலச்சான்று என்பதை யாரும் மறுக்க முடியாது.

தற்கால இஸ்லாமிய உலகின் செழிப்பிலும், சமயப் பற்றுறுதியிலும் இமாம் ஹுஸைனின் புரட்சி பிரதான பங்காற்றியுள்ளது என்பதை, காய்தல் உவத்தலின்றிச் சிந்திக்கும் எவரும் நன்குணர்ந்து கொள்வர்.

எனவே, இமாம் ஹுஸைனின் இஸ்லாமியப் புரட்சியின் பெறுமானங்களை உணர்ந்து, சுயவாழ்வில் அவற்றைப் பிரயோகித்துப் பயனடையவும், அதன் மூலம் மறுமையின் ஈடேற்றத்தைப் பெற்றுக் களிக்கவும் அல்லாஹ் எமக்குப் பேரருள் புரிவானாக!

# (03)

# தியாகச் செயம்மல் இமாம் ஹுஸைன் (அலை)

இமாம் ஹுஸைன் (அலை) அவர்கள் ஹிஜ்ரி நான்காம் ஆண்டு ஷஃபான் மாதம் மூன்றாம் நாள் இவ்வுலகில் ஜனனமானார்கள். அவர்கள் தமது சிறுபராயத்திலே தமது பாட்டனாராகிய முஹம்மத் (ஸல்) அவர்களோடு மிக்க அன்பாகவும், நேசமாகவும் இருந்தமையால் அவர்களை விட்டும் தொழுகை நேரங்களில் கூட பிரியாதவர்களாகவே காணப்பட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் இமாம் ஹுஸைன், இமாம் ஹஸன் ஆகிய இருவர் மீதும் அதிகளவு அன்பு காட்டியதோடு, அவர்களது சிறப்புக்களைப் பற்றி அதிகமான ஹதீஸ்களையும் நவின்றுள்ளார்கள். ஹதீஸ் கிரந்தங்களில் இமாம் ஹுஸைன் (அலை) அவர்களது சிறப்புக்களைப் பற்றி ஏராளமான ஹதீஸ்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில், "ஹஸனும் ஹுஸைனும் சுவர்க்கத்து வாலிபர்களின் இரு தலைவர்கள்" என்பது போன்ற ஹதீஸ்கள் முதவாத்திரான தரத்தைக் கொண்டதாக காணப்படுகின்றன.

நபி (ஸல்) அவர்கள் தாம் இவ்விரு இமாம்கள் மீதும் கொண்டுள்ள அன்பையும், பாசத்தையும் சகல ஸஹாபாக்களும் தெளிவாக அறிந்து உணர்ந்து கொள்ளக் கூடியதாக தமது நடவடிக்கைகளை ஒழுங்கமைத்துக் கொண்டிருந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் தமது பேரக்குழந்தைகள் மீது தாம் கொண்டுள்ள அன்பை ஸஹாபாக்களும் உணர்ந்து அவர்களும் இவர்கள் மீது அன்பு செலுத்த வேண்டும் என முயற்சித்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் இமாம் ஹஸன், இமாம் ஹுஸைன் குறித்துப் பின்வருமாறு கூறினார்கள்: "இறைவா! இவர்களை யாரெல்லாம் நேசிக்கின்றார்களோ அவர்களை நீயும் நேசிப்பாயாக" மேலும் கூறினார்கள்: "யார் என்னை நேசிக்கின்றாரோ அவர் எனது இவ்விரு குழந்தைகளையும் நேசிக்கட்டும்" மேலும் கூறினார்கள்: "யார் ஹஸனையும் ஹுஸைனையும் நேசிக்கின்றாரோ அவர் என்னை நேசித்தவராவார். யார் அவ்விருவரையும் வெறுக்கின்றாரோ அவர் என்னை வெறுத்தவராவார்" மேலும் கூறினார்கள்: "அவர்கள் இருவரும் உலகின் றைஹான் மலக்குகளாவர்"

இமாம் ஹுஸைன் (அலை) அவர்களது தனிச்சிறப்புகளைப் பற்றியும் நபி (ஸல்) அவர்கள் கூறிய அதிகமான அறிவிப்புகள் உள்ளன. அவற்றில் ஒன்றுதான் "ஹுஸைன் என்னில் உள்ளவர். நான் ஹுஸைனில் உள்ளவர்" எனும் ஹதீஸாகும்.

இமாம் ஹுஸைன் (அலை) அவர்களின் நேசர்களில் ஒருவராகிய யஹ்யா பின் ஸாலிம் முவஸ்ஸலி அறிவிக்கின்றார்: ஒரு நாள் இமாமவர்களோடு நான் சென்று கொண்டிருந்தேன். அப்போது நாம் ஒரு வீட்டை அடைந்தோம். அவ்வீட்டாரிடம் தண்ணீர் தருமாறு இமாமவர்கள் வேண்டினார்கள். அங்கிருந்த அடிமை ஒரு பாத்திரத்தில் நீரை எடுத்து வந்து இமாமவர்களிடம் கொடுத்தான். இமாமவர்கள் அந்நீரை அருந்துவதற்கு முன்பதாக தமது கையிலிருந்த வெள்ளி மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்து "இதை உனது வீட்டாருக்குக் கொடு" எனக் கூறியதன் பின்புதான் அந்த நீரை அருந்தினார்கள்.

அபூபக்கர் பின் முஹம்மத் பின் ஹஸ்ம் அறிவிக்கின்றார்: இமாம் ஹுஸைன் (அலை) அவர்கள் ஒரு தடவை ஒரு வழியால் சென்று கொண்டிருக்கும் போது ஏழைகள் கூட்டம் ஒன்று அவ்விடத்தில் உணவருந்திக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். இமாமைக் கண்ட அவ் ஏழைகள் தம்மோடு சேர்ந்து உணவருந்த வருமாறு இமாமை அழைத்தார்கள். இமாமவர்கள், 'இறைவன் பெருமை அடிப்பவர்களை நேசிப்பதில்லை' எனக் கூறிக்கொண்டு கீழே இறங்கி வந்து அந்த ஏழைகளோடு இணைந்து உணவுண்டார்கள். பின்பு அவ் ஏழைகளை நோக்கி நீங்கள் என்னை அழைத்தமையால் உங்களது அழைப்பை நான் ஏற்று உங்களோடு உணவுண்டேன். தற்போது நான் உங்களை எனது விருந்துக்கு அழைக்கின்றேன். அவசியம் அனைவரும் எனது அழைப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என வேண்டிக் கொண்டார்கள். பின் அவர்கள் அனைவரையும் தமது வீட்டுக்கு அழைத்துச் சென்று தமது மனைவியாகிய ருபாப் அவர்களைப் பார்த்து தயார் செய்திருக்கக் கூடிய அனைத்து உணவுகளையும் கொண்டு வரும்படி வேண்டி, அவற்றை அவ் ஏழைகளுக்கு வயிறார உண்ணக்கொடுத்து உபசரித்தார்கள்.

இமாம் பாக்கிர் (அலை) அவர்கள் அறிவிக்கிறார்கள்: இமாம் ஹுஸைன் (அலை) அவர்கள் தமது ஹஜ்ஜை நடந்து சென்றே நிறைவேற்றினார்கள். அவர்களது ஒட்டகை அவர்களுக்குப் பின்னால் சென்று கொண்டிருந்தது.

இமாம் ஹுஸைன் (அலை) அவர்கள் ஜமல், சிப்பீன், நஹர்வான் போன்ற யுத்தங்களில் பங்கேற்று தமது தந்தை அலீ (அலை) அவர்களோடு இணைந்து அநியாயக்காரர்களோடும், உடன் படிக்கையை மீறியவர்களோடும் யுத்தம் செய்தார் கள். சிப்பீன்

யுத்தத்தின் போது இமாம் ஹுஸைன் அவர்கள் ஆற்றிய உரையொன்று அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது. அதில் மனிதர்களை புனித யுத்தத்திற்காக உற்சாகமூட்டியுள்ளார்கள். சிப்பீன் யுத்தத்தின் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக ஷாம் வாசிகளிடமிருந்து நீரோடையை மீட்டெடுப்பதில் இமாமவர்கள் முக்கிய பங்கினை வகித்தார்கள். அந்த வெற்றியின் போது இமாம் அலீ (அலை) அவர்கள் கூறினார்கள்: “இது ஹுஸைன் அவர்களது பரக்கத்தினால் கிடைத்த முதலாவது வெற்றியாகும்”

உபைதுல்லாஹ் பின் உமர் என்பவன், சிப்பீன் யுத்தத்தின் போது இமாமவர்களை அழைத்து, உமது தந்தை அவ்வாறு இவ்வாறு பண்ணியுள்ளார் எனத் தூற்றிப் பேசிய போது, இமாமவர்கள் அவனை நோக்கி, “நீ காஸிதீன்களைச் சேர்ந்தவன். அவர்களோ பலவந்தத்தின் அடிப்படையில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள். உண்மையில் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருக்கவில்லை” என பதிலளித்தார்கள்.

இமாமவர்கள் தமது சகோதரரின் இமாமத் காலப் பிரிவின் போது முழுமையாக அவர்களுக்கு ஒத்து ழைப்பு வழங்கினார்கள். ஈராக் வாசிகள் பல தடவை அவர்களை கூபாவுக்கு வருமாறு அழைத்த போதும், ஏன் தனது சகோதரரின் மறைவுக்குப் பின்னும் அவர்களது அழைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக முஆவியா உயிரோடு இருக்கும் வரை மௌனித்திருப்பது மேலானது எனக் கூறினார்கள். இதன் அர்த்தம் யாதெனில் இமாமவர்கள் பத்து வருடங்களாக முஆவியாவின் ஆட்சியை பொறுமை யோடு சகித்துக் கொண்டார்கள். இமாமவர்களின் அரசியல் வாழ்வில் இது மிக முக்கியமான விடயமா கும். ஆனால் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்ப டுவது மிகவும் குறைவாக உள்ளது. இமாமவர்களை கர்பலா எழுச்சியோடு மாத்திரம் மட்டுப்படுத்துவதே இதற்கான காரணமாக உள்ளது. இமாமவர்கள் என் றும் தமது கடமைகளை முழுமையாக உணர்ந்து நிறைவேற்றக் கூடியவர்களாகக் காணப்பட்டார்கள்.

இமாமவர்களது கடமையுணர்வை எடுத்துக் காட்டக் கூடிய மற்றுமோர் விடயமாக மதீனத்து உமையாக்களோடு தமது சகோதரராகிய இமாம் ஹஸன் (அலை) அவர்களது உடலை அடக்கம் செய்வதற்காக கொண்டு சென்ற போது நடந்து கொண்ட விடயத்தைக் குறிப்பிடலாம்.

யஃகூபி தனது கிரந்தத்தில் குறிப்பிடுகின்றார்: இமாம் ஹஸன் (அலை) அவர்களது ஜனாஸாவை அடக்கம் செய்வதற்காக எடுத்துச் சென்ற போது, ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் தனது ஒட்டகையின் மேல் ஏறிக் கொண்டு சொன்னார்கள்: “எனது வீட்டில் அடக் கம்

*செய்யப்படுவதற்கு நான் எவருக்கும் அனுமதிய ளிக்க மாட்டேன்" அவ்வேளை காஸிம் பின் முஹம் மத் பின் அபீபக்கர், தனது மாமியாராகிய ஹஸ்ரத் ஆயிஷாவிடம்; "நாம் இது வரை ஜமல் யுத்தத்தின் விபரீதங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின் றோம். இப்போது மீண்டும் பிரச்சினையை ஏற்படுத் தவா போகின்றீர்கள்?" எனக் கேட்ட போதுதான், ஹஸ்ரத் ஆயிஷா தனது கருத்திலிருந்து பின்வாங் கினார். ஆனால் மர்வானின் சந்ததியினர் இமாம் ஹஸன் (அலை) அவர்களை அங்கே அடக்கம் செய்வதற்கு அனுமதி தராமல் மறுத்து விட்டார்கள். அப்போது இமாம் ஹுஸைன் அவர்களைச் சுற்றியிருந்தவர்கள், "மர்வானின் சந்ததியினரை எங்களிடம் விட்டு விடுங்கள். நாங்கள் அவர்களது தலைகளைத் துண்டித்து விடுகின்றோம்" எனக் கூறிய போது, இமாமவர்கள், "எனது சகோதரர் இவ்விடயத்தில் ஒரு துளி இரத்தம் கூட சிந்தப்படக் கூடாது என எனக்கு வஸிய்யத் செய்துள்ளார்" என்றார்கள். அதன் பின் இமாம் ஹஸன் (அலை) அவர்களது ஜனாஸாவை ஜன்னதுல் பகீஃயில் இமாம் ஹுஸைன் அவர்கள் அடக்கம் செய்தார்கள்.*

*இமாம் ஹுஸைன் (அலை) அவர்களின் பொறு மைக்கும் விட்டுக்கொடுப்புக்கும் சிறந்த உதார ணமாக இந்நிகழ்வு விளங்குகின்றது. இமாமவர்கள் எல்லா விதமான நற்குண நல்லொழுக்கப் பண்புகளும் நிரம்பப் பெற்றவர்களாக இருந்தார்கள். அதனால்தான் அவர்கள் இன்றுவரையும் நினைவு கூரப்படுகின்றார்கள். அவர்களது கர்பலா எழுச்சியும் முஸ்லிம் உலகில் பெரும் மாற்றத்தையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்தியுள்ளது.*

*எனவே, இமாம் ஹுஸைன் (அலை) அவர்களது சரித்திர நிகழ்வுகளை அறிந்து, அவற்றிலுள்ள அவர்களது நல்லொழுக்கப் பண்புகளை உணர்ந்து, அவற்றைப் பின்பற்றியொழுகப் பிரயத்தனம் மேற்கொள்வோமாக!*

# (04)

## சியாரத் ஆஷுூராவின் மகிமை

*அல்லாமா ஷேக் ஹஸன் பரீட் குல்பைகானி தனது உஸ்தாத் மர்ஹூம் ஆயத்துல்லாஹ் ஹாஜ் ஷேக் அப்துல் கரீம் ஹாயிரீ எஸ்தீ அவர்கள் கூறியதாக அறிவிப்பதாவது;*

*நான் ஈராக்கின் 'ஸாமிர்ரா' எனும் ஊரில் கல்வி கற்றுக் கொண்டிருந்த போது, அவ்வூர்வாசிகள் உயிர்கொல்லி மற்றும் தொற்று நோய்களால் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருந்தார்கள். அதன் காரணமாக ஒவ்வொரு நாளும் பலர் மரணமடைந்து கொண்டிருந்தார்கள்.*

*ஒரு நாள் எனது உஸ்தாத்மார்களில் ஒருவரான மர்ஹூம் செய்யித் முஹம்மத் பஷாரகீ அவர்களது வீட்டில் கல்விமான்கள் ஒன்று கூடியிருந்தார்கள். அப்போது எதிர்பாராதவிதமாக மர்ஹூம் மீர்ஸா முஹம்மத் தகீ ஷுூராஸி அவர்கள் அங்கே சமுகம் தந்தார்கள். அவர்களிடம் அவ்வூரிலுள்ள உயிர்கொல்லி, மற்றும் தொற்று நோய் பற்றி அறிவிக்கப்பட்டது. தற்போது ஏற்பட்டுள்ள நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மரணத் தறுவாயில் உள்ளார்கள் எனவும் விளக்கமளிக்கப்பட்டது.*

*அதனைச் செவிமடுத்துக் கொண்டிருந்த மர்ஹூம் மீர்ஸா முஹம்மத் அவர்கள், "நான் ஒரு தீர்ப்பு வழங்கினால் அதனை நிறைவேற்றுவது அவசியமா? இல்லையா?" எனக் கேட்டார். கூடியிருந்தவர்கள் அனைவரும் நிறைவேற்றுவது அவசியம் என்பதை உறுதிப்படுத்தினார்கள்.*

*பின் மீர்ஸா அவர்கள் கூறினார்; "ஸாமிர்ராவிலே இருக்கக் கூடிய அஹ்லுல்பைத் நேசர்கள் அனைவரும் இன்றிலிருந்து பத்து நாட்களுக்கு சியாரத் ஆஷுூராவை ஓதி அதன் தவாபை இமாம் மஹ்தி (அலை) அவர்களின் தாயாரன ஹஸ்ரத் நர்ஜிஸ் அவர்களுக்கு ஹதிய்யா செய்யட்டும். அப்போது இவர்களைப் பீடித்துள்ள நோய்கள் குணமடைந்து விடும்" என்றார்கள்.*

*கூடியிருந்தவர்கள் இச்செய்தியை அவ்வூரில் வாழ்ந்த அஹ்லுல்பைத் நேசர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்தினார்கள். இச்செய்தியைக்*

கேள்வியுற்ற அஹ்லுல்பைத் நேசர்கள் அனைவரும் சியாரத் ஆஷூராவை ஓதத் தொடங்கினார்கள்.

அதன்பின் சியாரத் ஆஷூரா ஓதியவர்கள், தமக்கேற் பட்டிருந்த நோய்களிலிருந்து குணமடைந்து ஆரோக்கியம் பெற்றனர். ஆனால் சியாரத் ஆஷூ ராவை ஓதாதிருந்த மற்றைய சகோதரர்களுக்கு (அஹ்லுல்பைத்தினரைப் பின்பற்றாதவர்களுக்கு) நோய்கள் குணமடையாது மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே இருந்தன.

அஹ்லுல்பைத்தினருக்கு நோய்கள் குணமான செய்தி ஊரெல்லாம் பரவியது. இதனை அறிந்த மற்றையவர்கள் குணமடைந்தவர்களிடம் வந்து குணமானதற்குரிய காரணத்தைக் கேட்டபோது, சியாரத் ஓதியதே காரணம் என அவர்கள் பதிலளித் தனர். இதைக் கேட்ட மற்றைய சகோதரர்களும் சியாரத் ஆஷூராவை ஓதலானார்கள். அதன் கார ணமாக அவர்களும் பூரண குணமடைந்தார்கள்.

அல்லாமா ஷேக் ஹஸன் பரீட் கூறுகின்றார்கள்: நான் எப்போதெல்லாம் கடுமையான கஷ்டங்களில் இருக்கின்றேனோ, அப்போது மர்ஹூம் மீர்ஸா அவர்களது ஞாபகம் வரும். முஹர்ரம் மாத முதல் நாள் தொடக்கம் சியாரத் ஆஷூரா ஓதுவதை ஆரம்பித்து விடுவேன். மாதத்தின் எட்டாம் நாளை அடைகின்ற போது வழமை போன்று எனது கஷ்டங்கள் நீங்கிவிடும்.

(தாஸ்தான்ஹாயே ஷெகுப்த்)

# (05)

# இமாம் ஹுஸைன் நினைவலைகள்

*அஹ்லுல்பைத்தினரிடமிருந்து இஸ்லாமிய ஆட்சிப் பொறுப்பை சதிமுயற்சி, மற்றும் இராணுவ முன்னெடுப்புகள் மூலமாகக் கபளீகரம் செய்து கொண்ட உமையாப் பரம்பரையினர், கி.பி. ஏழாம் நூற்றாண்டின் பிற்கூறில் தமது ஆட்சியை ஸ்தாபித்ததோடு, அவ்வாட்சியைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வதற்காகவும், அஹ்லுல்பைத்தினர் மீளவும் எழுச்சியுறுவதைத் தடுப்பதற்காகவும் கொடுமைகளையும் படுகொலைகளையும் அஹ்லுல்பைத்தினர் மீது கட்டவிழ்த்து விட்டனர். இவ்வாறு கொடுமைப்படுத்திய உமையா கலீபாக்களுள் முஆவியா (கி.பி.661-681), யஸீத் (கி.பி.681-686), மர்வான் (கி.பி.686-687), அப்துல்மலிக் (கி.பி.687-705) ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்கள், நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தினரான ஹாஷிமிய்யாக்களையும், அவர்களது ஆதரவாளர்களையும் தேடித்தேடிக் கொன்றொழிப்பதிலும், அவர்களது எழுச்சிகளை நசுக்குவதிலும் கடும் போக்கைக் கடைப்பிடித்தனர். உமையா ஆட்சியாளர்களால் இழைக்கப்பட்ட கொடுமைகளைத் தாங்க முடியாமல் பனூஹாஷிம்கள் அரபு நாட்டிலிருந்து இடம்பெயர்ந்து இந்தோனேஷியாவிலும் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் வந்து குடியேறினர். இலங்கைக்கு வந்தோர் திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம், கொழும்பு, வேர்விலை, காலி போன்ற கரையோரப் பிரதேசங்களில் குடியமர்ந்தனர்.*

*அரபுத் தேசத்திலிருந்து இலங்கைக்கு வந்து குடியேறிய முஸ்லிம்கள், தமிழ் பேசும் மீனவர்களான முக்குவ இனப்பெண்களையே அதிகமாகத் திருமணம் செய்திருக்கிறார்கள். விருந்தோம்பலில் அரபியர்களைப் போல் முக்குவர்களும் தலை சிறந்து விளங்கியமையும், முக்குவ இனப்பெண்கள் மிகவும் அழகானவர்களாக இருந்தமையும் இதற்குக் காரணமாக இருக்கக் கூடும். இந்த அழகுப் பெண்களை அடைவதற்காகப் பல சண்டைகளும் ஏற்பட்டிருக்கின்றன. புகழ்பெற்ற அரபு யாத்திரிகரான இப்னு பதூதா கூட இத்தகைய சண்டைகளை அவதானித்து சமாதானத்தை ஏற்படுத்த உதவியிருக்கிறார்.*

இந்தத் திருமண இணைப்புகளின் பின்னான வாழ்க்கை முறையில் முக்குவப் பெண்கள் தமது இந்து சமயத்தையும், அரேபியர்கள் தமது அரபு மொழியையும் விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று. அதன் விளைவாக தொடர்ந்து வந்த அவர்களது தலைமுறையினர்களுக்கு தாய்மொழி தமிழாகவும், பின்பற்றும் சமயம் இஸ்லாமாகவும் நிலைபெற்றன.

இந்த முஸ்லிம்கள் பெரும்பாலும் அஹ்லுல்பைத்தைப் பின்பற்றும் பனூஹாஷிம்களாக இருந்ததால், அவர்களது நாளாந்த மற்றும் விசேட தினங்களின் போது தமது அடிப்படைக் கொள்கைக்கும், சமய வாழ்வியலுக்கும் ஏற்றவாறு தமது தனிப்பட்ட மற்றும் கூட்டு வாழ்க்கைக் கலாசார முறைகளை அவர்கள் நடைமுறைப்படுத்தி வந்தனர். ஆரம்பத்திலிருந்த முஸ்லிம்களின் கல்விப்புலமை, அஹ்லுல்பைத் ஈடுபாடு என்பன இக்கலாசார முறைமைகள் முஸ்லிம் வாழ்வியலுடன் அழுத்தமாக வேர்விட்டுச் செழிக்கக் காரணமாயின. அக்கலாசார நடைமுறைகளே இன்று புராதன பாரம்பரியங்களாக அடையாளப்படுத்தப்பட்டு அவதானிக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை முஸ்லிம்களது வாழ்க்கையுடன் தொடர்புபட்ட பெரும்பாலான பாரம்பரியங்களின் மூலகர்த்தாக்கள், அரேபியாவிலிருந்து வந்த பனூஹாஷிம்களே என்பதால், அவற்றில் அஹ்லுல்பைத் கருத்தியலைக் கணிசமாக அவதானிக்க முடிகின்றது. அஹ்லுல்பைத் இமாம்களின் வாழ்வையும் சிறப்பையும் பறைசாற்றுவதாகவும், அவற்றிலிருந்து நன்மையையும் இவ்வுலக மறுவுலகப் பயன்பாட்டையும் அடைந்து கொள்வதற்கான வழிகாட்டலையும் ஊக்குவிப்பையும் வழங்குவதாகவும் அவை அமைந்திருந்தன. அக்கால மக்கள் அஹ்லுல்பைத் தொடர்பான அறிவில் எத்தகைய அறிவைப் பெற்றிருந்தார்கள் என்று துல்லியமாகக் கணிக்க முடியாதெனினும், அஹ்லுல்பைத்தினரை நேசிப்பதிலும், அவர்களது வழிமுறைகளைப் பின்பற்றுவதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்கள் என்று கூற முடியும்.

இலங்கை முஸ்லிம்களுடைய சமயப் பாரம்பரிய அனுஷ்டானங்களில், அஹ்லுல்பைத் வழிகாட்டிகளில் ஒருவரான இமாம் ஹுஸைன் (அலை) அவர்கள் தொடர்பான நினைவலைகளும் செறிந்திருந்தன. அத்தகைய அனுஷ்டானங்களில் சிலவற்றைக் கீழ்க்காணுமாறு தொகுத்து நோக்கலாம்.

துக்க தின அனுஷ்டிப்பு

முஹர்ரம் மாதம் பத்தாம் நாள் எப்போதும் துக்கதினமாக இலங்கை முஸ்லிம்களால் அனுஷ்டிக்கப்பட்டு வந்துள்ளது. இதற்கு இமாம் ஹுஸைனின் படுகொலையன்றி வேறெதுவும் காரணமில்லை.

இத்துக்கதின அனுஷ்டிப்புக்காக, இம்மாதத்தின் 1 தொடக்கம் 10 வரையான தினங்களில் வீட்டில் மகிழ்ச்சி தரும் எல்லா விடயங்களையும் ஒத்தி வைப்பது முஸ்லிம்களின் பாரம்பரியமாகும். இமாம் ஹுஸைன் அவர்களும் அவர்களது குடும்பத்தினரும் உமையாக்களால் முற்றுகையிடப்பட்டு, தாகந்தீர்ப்பதற்காகத் தண்ணீர் அருந்தவும் முடியாதவாறு தடுக்கப்பட்டு, பசியோடும் தாகத்தோடும் பாலைவனத்தில் வைத்துப் பரிதாபமாகப் படுகொலை செய்யப்பட்ட மிகச் சோகமான வரலாற்றுக் காலகட்டமான முஹர்ரம் முதல் 10 தினங்களிலும் தாம் மகிழ்ச்சியை அனுபவிப்பது, நபிகளாரையும் அவர்களது குடும்பத்தினரையும் அலட்சியப்படுத்தி வேதனைப்படுத்தும் மாபாதகச் செயல் என்ற உணர்வே, முஸ்லிம்கள் இத்துக்கதின அனுஷ்டிப்பில் ஈடுபடக் காரணமாகும்.

அவ்வாறே ஸபர் மாதத்திலும் முஸ்லிம்கள் தங்கள் சந்தோஷ நிகழ்வுகளைத் தவிர்ந்து கொள்வர். ஏனெனில், இம்மாதத்திலேதான் நபி (ஸல்) அவர்கள் நோய்வாய்ப்பட்டார்கள். அந்த நோயின் பின்புதான் ரபீஉல் அவ்வல் மாதம் அவர்கள் வபாத்தானார்கள்.

இத்தகைய துக்க தினங்களில் திருமணம், கத்னா வைபவம், காது குத்தல் போன்ற சந்தோஷ நிகழ்ச்சிகளையெல்லாம் முஸ்லிம்கள் தவிர்த்து விடுவர். பிறிதொரு மாதத்திலேதான் அவற்றை மேற்கொள்வர்.

கத்தம் ஓதல் நிகழ்வு

அரபு மொழியில் 'ஈஸாலுஸ்ஸவாப்' (நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தல்) எனப்படும் செயலே, இலங்கை முஸ்லிம்களிடையே 'கத்தம்' எனும் பெயரில் நடைமுறையிலுள்ளது. குர்ஆனை ஓதி அதன் நன்மைகளை மரணித்த ஒருவருக்கு அன்பளிப்புச் செய்வதே இதன் பிரதான நோக்கமாகும். அல்குர்ஆனை முழுமையாக ஓதியோ, அல்லது யாசீன் சூராவை மட்டும் ஓதியோ கத்தம் ஓதல் நிகழ்வுகள் இடம்பெறும்.

இவ்வாறு ஓதப்படும் கத்தம் நிகழ்ச்சிகளில் படுகொலைக் கத்தம் என்பது முக்கியமானதாகும். இமாம் ஹுஸைன் (அலை) அவர்கள் கர்பலாவில் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வை நினைவு கூருமுகமாக இந்த கத்தம் ஓதப்படுகின்றது. இதன்போது, யாசீன் சூரா முழுமையாக ஓதப்பட்டு, அதன் நன்மை இமாம் ஹுஸைன் (அலை) அவர்களுக்கு அன்பளிப்புச் செய்யப்படுவதோடு, அன்றைய தினம் இமாம் ஹுஸைனின் பெயரில் விருந்துபசாரமும் நடைபெறும். முஹர்ரம் மாதத்தின் ஏதாவதொரு தினத்தில் இந்த நிகழ்வை வீட்டிலுள்ளோர் ஏற்பாடு செய்வர். இந்நிகழ்வில் ஓதுவதற்கென 'ஆஷூரா துஆ' எனும் நீண்ட பிரார்த்தனைத் தொகுப்பும் உள்ளது.

கூடு இழுத்தல்

முஹர்ரம் மாதத்தில் இமாம் ஹுஸைன் படுகொலை செய்யப்பட்ட கர்பலா நிகழ்வை நினைவு கூரும் ஒரு நடைமுறையே கூடு இழுத்தல் எனும் நிகழ்வாகும். வீதி நாடகம் போல் இடம்பெறும் இந்நிகழ்வில், இமாம் ஹுஸைனின் நல்லோர் அணி, யஸீதின் தீயோர் அணி என இரு அணியினர் தயாராகி கர்பலாவை நினைவூட்டுமாறு நடித்துக் காட்டுவார்கள். இமாம் ஹுஸைனின் ஷஹாதத்தை நினைந்து மார்பிலடித்துக் கொண்டு அழுவார்கள். யஸீதின் சிம்மாசனமாகக் கூடொன்றைத் தயார் செய்து, அதனை இழுத்துச் சென்று நெருப்பிலிட்டுப் பொசுக்குவார்கள். சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்பு வரை கொழும்பின் பல இடங்களிலும் இப்பாரம்பரியம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது.

முஹர்ரம் மாதத்தில் இமாம் ஹுஸைனை நினைவு கூர்ந்து அவர்களின் நலனுக்காகப் பிரார்த்திப்பதும், யஸீதையும் உமையாக்களையும் சபிப்பதும் அஹ்லுல்பைத் இமாம்களால் தொடர்ச்சியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரக்கூடிய அமல்களாகும். அந்த அமல்களைச் செயல் வடிவில் உள்வாங்கிய ஒரு நிகழ்வாகக் கூடு இழுத்தல் அமையப் பெற்றுள்ளது.

ஹஸன் ஹுஸைன் மௌலிது

எகிப்திய முஸ்லிம் அறிஞரான 'பக்கீர் முஹம்மத் இப்னு அஹமத் அல்காஹிரீ' அவர்களால் கோர்வை செய்யப்பட்ட இந்த மௌலிது நூல், நபி (ஸல்) அவர்களின் பேரர்களான இமாம் ஹஸன் (அலை), இமாம் ஹுஸைன் (அலை) ஆகியோரைக் கருப்பொருளாகக் கொண்டது. 'மவாஹிபுஸ் ஸைன் ஃபீ மனாகிபில் ஹஸனைன்' என்பது இதன் நூற்பெயராகும். 14 தொகுதி அரபு கஸீதாக்களைக் கொண்ட இந்நூல், இமாம்களான ஹஸன், ஹுஸைன் இருவரினதும் சிறப்புகளையும், அவர்களது இறையச்சம், வாய்மை, ஒழுக்கம், வீரம் உள்ளிட்ட நற்பண்புகளையும், அவர்கள் மீது அன்பை வெளிப்படுத்த வேண்டிய முஸ்லிம்களது கடமையையும் கவிதைகளாகச் சித்தரிக்கின்றன. இவற்றோடு ஒன்பது ஹிகாயத்துகளையும், சின்ன துஆ, பெரிய துஆ எனும் இரு பிரார்த்தனைத் தொகுதிகளையும் இது கொண்டுள்ளது.

"(எனது இஸ்லாமியப் பிரசாரப் பணியாக) இதற்காக (எனது) உறவினர்கள் மீது அன்பு கொள்வதைத் தவிர நான் வேறு யாதொரு கூலியையும் உங்களிடம் கேட்க மாட்டேன் என (நபியே!) நீர் கூறுவீராக!" (42:23) எனும் அல்குர்ஆன் வசனம், அஹ்லுல்பைத்தினர் மீது அன்பு கொள்வது முஸ்லிம்களது மார்க்கக் கடமையென்பதையும், அது நபிகளாருக்கான முஸ்லிம்களின் கைம்மாறு எனவும் தெளிவுறுத்துகின்றது. இக்கருத்தை

*வெளிப்படையாகப் பேசும் ஹஸன் ஹுஸைன் மௌலிது, நபிகளார் மீது வைக்கும் அன்பும், அவர்களது அஹ்லுல்பைத்தினர் மீது வைக்கும் அன்பும் சமமானது; பிரிக்க முடியாதது என்பதைத் திட்டமாக எடுத்துரைக்கின்றது.*

*இமாம் ஹுஸைன் (அலை) அவர்கள் இறைவிரோதிகளால் படுகொலை செய்யப்பட்டு ஷஹீதாக்கப்பட்ட முஹர்ரம் மாதத்தில்தான் இந்த மௌலித் ஓதப்படுகின்றது. முஹர்ரம் முதலாம் நாள்தொடக்கம் பத்தாம் நாள் வரை ஒவ்வொரு மஃரிப் தொழுகையின் பின்னும் இம்மௌலித் ஓதப்படுவதோடு, இஷாத் தொழுகையின் பின் விசேட உரைகளும் இடம்பெறும். இமாம் ஹுஸைனின் பெயரால் கந்தூரி ஏற்பாடு செய்யப்பட்டு ஏழை எளியோருக்கும் ஏனையோருக்கும் 'நாரிசா' எனும் உணவுப் பொட்டலங்களும் வழங்கப்படும்.*

*கர்பலா நினைவுகள்*

*கடந்த பல தசாப்தங்களுக்கு முன்னர் வரையிலும் இலங்கையின் பல பாகங்களிலும் கர்பலா சம்பவங்கள் முஸ்லிம்களால் பெரும் வீரதீரச் செயல்களாகச் சித்தரித்துக் காண்பிக்கப்பட்டு வந்தன. இவை தற்போது அருகி வருகின்றன.*

*பார்வையாளர்கள் நிரம்பி வழியும் ஓர் அரங்கில் மேளதாளங்களுடன் அச்சமூட்டக்கூடிய ஓர் இசையுடன் பாடல்கள் ஆரம்பமாகும். இசை உச்சகட்டத்தை அடையும் போது திடீரென இரு வாள் வீரர்கள் அரங்கத்துக்குள் பாய்ந்து "யா ஹுஸைன்!" எனச் சத்தமிட்டுக் கொண்டு மிக உக்கிரமாக வாட்போரில் ஈடுபடுவர். அவர்கள் மிகத் திறமையாகவும் சாதுர்யமாகவும் பாதுகாப்பாகவும் சண்டையிடுவர். இன்னும் இருவரோ அல்லது கூடுதலானவர்களோ அவர்களுடன் இணைந்து கொள்வர். சுமார் 10 நிமிட நேரம் சண்டையிட்ட பின் குழல் ஊதப்படும். அப்போது வீரர்கள் எவ்வித காயமுமின்றி பார்வையாளர்களின் ஆரவாரத்துடன் அரங்கை விட்டு வெளியேறுவர்.*

*இதேபோல் கர்பலாவை நினைவுபடுத்துமுகமாக வாட்போர், சிலம்பம், மல்யுத்தம், சீனடி போன்ற வீர விளையாட்டுகளும் இடம்பெறும். வாட்போரைத் தொடர்ந்து நீண்ட கூரிய கத்திகளுடன் தள்ளிவீழ்த்திக் கொண்டும், பாய்ந்து வீழ்ந்து நடனமாடிக் கொண்டும் மயிர்க்கூச்செறியும் விதத்தில் போராடுவர். அந்த அபாயகரமான ஆயுதங்களை ஒருவரின் கழுத்தைச் சுற்றியும், தோள்களை நோக்கியும், இதயத்தை நோக்கியும், தொடைகளுக்கு மேலும் கீழும் செலுத்தி காயமேற்பட்டு விடாமல் மிக இலாவகமாகப் போரிடுவர்.*

பின்னர் சீனடி வீரர்கள் தமது திறமைகளைக் காட்டுவர். சீனடி என்பது முஸ்லிம்களுக்கு மத்தியில் மிகவும் பிரபலமான ஒரு பாதுகாப்புக் கலையாகும். வீரர்கள் எம்பிக் குதித்தும், பாய்ந்தும், கைகளாலும் கால்களாலும் அடித்து ஓசையை எழுப்பிய வண்ணமும் எதிரிகளுடன் போரிடுவர்.

கம்புகளால் சிலம்பம் விளையாடுவது மற்றொரு அழகிய கலையாகும். மத்தியில் ஒருவர் நீண்ட கம்புடன் சுற்றிவர உள்ளவர்களுடன் மிகப்பாதுகாப்பாகப் பாய்ந்து கொண்டும், நடன பாணியில் மிக வேகமாகக் கம்பைச் சுழற்ற சுற்றியுள்ளவர்கள் தமது கம்புகளால் அதனை இலாவகமாகத் தடுத்தும் சண்டையிடுவர். பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமான இந்தக் கலை பற்றி வர்ணிக்க வார்த்தைகளே இல்லை.

இவ்வாறு பாரம்பரிய நிகழ்வுகள் மூலம், இலங்கை முஸ்லிம்களால் அவர்களது பூர்வீகம் தொடக்கம் இமாம் ஹுஸைன் (அலை) அவர்கள் நினைவுகூரப்பட்டு வந்துள்ளார்கள். இமாம் ஹுஸைனின் உயிர்த்தியாகத்தின் பாதிப்புகளின் ஒரு பகுதியே இவையெனில் அது மிகையன்று.

ஆனால், சமீப காலத்திலிருந்து இத்தகைய பாரம்பரியங்களுக்கு எதிரான போக்கு புதிதாக விழிப்புணர்வுக்குட்பட்டவர்களாகத் தம்மை இனங்காண்பித்துக் கொள்ள முனையும் ஒரு குழுவினரால் மூர்க்கத்தனமாகச் செயலாற்றப்பட்டு வருகின்ற நிலை தோன்றியுள்ளது. சமயப் பாரம்பரியங்கள், சமூக இருப்பின் தொன்மையையும் உரிமையையும் சான்றளிக்கும் முக்கிய நிகழ்வாவணங்கள் என்ற உண்மையை அறியாத, அல்லது சமய விரோதிகளின் இழுப்புக்கும் கவர்ச்சிகளுக்கும் அடிமையாகிப் போன இழிந்த அறிவீனக் குழுவினரின் செயலைப் பிரதிபலிக்கும் இப்போக்கு வன்மையாகக் கண்டித்துத் தடுக்கப்பட வேண்டியதொன்றாகும்.

இலங்கை முஸ்லிம்கள், அஹ்லுல்பைத் கருத்தியல்களுடன் தமது பூர்வீகம் தொடக்கம் பரிச்சயம் கொண்டுள்ளனர். இந்தப் பரிச்சயத்தையும், அதனூடாகத் தோன்றும் ஆன்மீக இறுக்கத்தையும் தளர்த்த முனையும் எல்லா சதிமுயற்சிகளையும் இனங்கண்டு அவற்றைத் தவிடுபொடியாக்கத் துணிவுடன் போராட வேண்டிய கடமை, இலங்கை முஸ்லிம்களின் முக்கிய பொறுப்பாக நோக்கப்பட வேண்டியதாகும்.

# (06)

# பனூஹாஷிம்களின் பூரணச் சந்திரன்

*அவரது நாமம் நமது இதயங்களுக்கு தைரியம், விசுவாசம் என்ற இனிய நினைவுகளை எடுத்து வருகின்றது. அவர் தியாகத்தினதும் நற்குணங்களினதும் முழு உருவம். அவரது குதிரையின் குழம்புகளைப் பெருக்கெடுத்தோடும் ஆறு நனைத்துச் சென்றவேளையிலும் அவரது சகோதரரின் முகாமில் மூன்று நாட்களுக்கும் மேலாக நீரின்றித் தவிக்கும் குழந்தைகளுக்காகத் தனது சொந்தத் தாகத்தைத் தணிக்க மறுத்தவர்.*

*நன்றியுள்ளவர்களின் நாவில் தினமும் ஒலிக்கும் ஓசைதான் "யா அப்பாஸ்!"*

*அபுல்பழ்ல் அப்பாஸ்! அந்த நாமம் நம்பிக்கை, நாணயம், நன்றி, நற்குணம், வீரம், விவேகம், பெருந்தன்மை என்பவற்றை நினைவூட்டுகிறது.*

*ஹிஜ்ரி 26ம் வருடம் ஷஃபான்மாதம் 4ம் திகதி மதீனாவில் பிறந்த அன்னாரின் அழகிய உடலமைப்பு, உருவத்தோற்றம் என்பவற்றின் காரணமாக 'கமரு பனீ ஹாஷிம்' (பனூஹாஷிம்களின் பூரண சந்திரன்) என அழைக்கப்பட்டார்.*

*அந்த ஒளிமிக்க பூரண சந்திரன் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஒளி மங்கித் தேய்ந்துவிடவில்லை. ஆஷூரா தினத்தில் யூப்பிரதீஸ் நதிக்கரையில் கைகள் துண்டிக்கப்பட்ட நிலையிலும், தலை பிளந்த நிலையிலும், நீரெடுப்பதற்காகக் கொண்டு வந்த தோற்பை எதிரிகளின் அம்புகளால் துளைக்கப்பட்ட போதும் இஸ்லாமியக் கொடியை உயர்த்திப்பிடித்தவர் அவர்.*

*அன்று அவர் கர்பலாக் களத்தில் நட்ட அந்த இஸ்லாமியக் கொடி இன்றும் என்றும் உண்மையான விசுவாசிகளை உணர்வூட்டி வருகின்றது. உடற்குறையுள்ளவர்களை அவர் நேசித்தார். துன்பத்தில் உழன்று கொண்டிருக்கும் உள்ளங்களுக்கு உதவி செய்யும் உபகாரியாக விளங்கினார்.*

*ஒவ்வொருவரும் பின்பற்றக் கூடிய ஓர் உதாரண புருஷராக அப்பாஸ் இருந்தார். அல்லாஹ்வின் சிங்கம், அறிவின் நுழைவாயில் இமாம் அலீ (அலை) அவர்களின் இந்த மேன்மை மிக்க புதல்வரின்*

*பிறப்புக்கு நோக்கமில்லாமலில்லை. விசுவாசிகளின் தளபதி இமாம் அலீ (அலை) அவர்கள் உம்முல் பனீன் என்ற மாதரசியை மணந்தது கர்பலா களத்தில் இமாம் ஹுஸைன் (அலை) அவர்களுக்கு உதவுமுகமாக ஒரு வீரமிக்க புதல்வரை ஈன்றெடுப்பதற்காகவே எனக் கூறப்படுகின்றது.*

*அவரது மூத்த சகோதரர் இமாம் ஹுஸைன் அவர்களின் 22வது பிறந்த தினத்துக்கு ஒரு நாளைக்குப் பின் அப்பாஸ் பிறந்தமை ஒரு தெய்வீக அருட்கொடையாகும். அவர்களுக்கிடையில் இரண்டு தசாப்த வித்தியாசமிருந்தாலும் அவர்களுக்கிடையில் ஓர் ஆழமான பாசப்பிணைப்பு காணப்பட்டது.*

*உமையா அடியாட்களின் ஆசை வார்த்தைகளுக்கு அடிமையாகாது, உலக வாழ்க்கைக்கு அவசியமான சுகபோகங்களை நிராகரித்து இமாம் ஹுஸைனுடனேயே இறுதிவரை இணைந்திருந்தார் அப்பாஸ். கர்பலா களத்தின் கொடியேந்தும் வீரரான அன்னார் கோழைகளின் சன்மானங்களைப் புறக்கணித்து, "நரகத்துடன் சுவர்க்கத்தை வியாபாரம் செய்யமாட்டோம்" என அவர்களுக்குக் கூறினார். "என் இதயத்தில் துடிப்பு இருக்கும் வரை இமாம் ஹுஸைனைத் தோற்கடிக்க விடமாட்டேன்" என அவர் முழங்கினார்.*

*ஆனால் பனூஹாஷிம்களின் பூரண சந்திரன் அவரது சகோதரர் இமாம் ஹுஸைனைப் போலவே வீரத்தியாகியாக வெற்றியைத் தழுவிக் கொண்டார். இன்றும் கூட கர்பலாவில் அபுல்பழ்ல் அப்பாஸ் அவர்களுடைய அடக்கஸ்தலம், தியாகிகளின் தலைவர் இமாம் ஹுஸைனுடைய அடக்கஸ்தலத்தைப் பாதுகாக்கும் காவற்கோபுரம் போல் கம்பீரமாய் உயர்ந்து நிமிர்ந்து நிற்கிறது.*

# (07)

## புரட்சிக் கனல்

மேலிருந்து சூரியன் உதிர்க்கும் உஷ்ணப் பிரகாசத்தை முழுவதுமாகத் தன் மணலின் இடுக்குகளில் உள்வாங்கிச் சீறிக் கொண்டிருந்தது, அந்த நிலம். உஷ்ண மூலகங்களைச் சேமித்து வைத்துச் சீற்றத்துடன் வெளிப்படுத்தும் கொதிப்பும், கொடூரமும் அதன் பிரத்தியேக இயல்பு. அந்த இயல்புதான், பாலைவனம் என்ற பெயரை அதற்கு வழங்கியிருக்கக் கூடும். தண்ணீர், அந்த நிலத்தின் தன்மை குறித்து அச்சம் கொண்டிருந்தது. எத்தனை துளிகள் விழுந்தாலும், விழுந்த மறுகணமே புதைந்து மறைந்து காணாமல் போய்விடுகின்றன. ஆவியாகி மேலே செல்கின்றதா? அடியில் கனலும் உஷ்ணம் உறிஞ்சிக் கொள்கிறதா? என்பதை நிதானமாய் நின்று கவனிப்பதற்கெல்லாம் அவகாசம் இருப்பதில்லை.

செங்குத்தாக விழும் சூரிய ஒளியின் கொடுந்தாக்குதலைத் தடுத்து நிறுத்தும் பாங்கிலமைந்த கூடாரமொன்றின் உட்புறத்தில் குளிர்மையான பிரகாசம் வழியும் புதுமையான அழகு மிதந்து கொண்டிருந்தது. மிக உஷ்ணமான அந்தக் கணப்பொழுதிலும், குளிர்மையைப் பிரசவிக்கும் அற்புதப் பிரகாசமாய் அது எழுந்து நிற்பதற்குரிய காரணத்தை அங்கிருந்த எல்லோரும் அறிந்திருந்தனர். ஏனெனில், அது இமாம் ஹுஸைனின் ஒளி. ஆன்மீகத்தினதும், தியாக நெறியினதும் செழுமை கட்டிப்புரளும் தெய்வீகத்தின் மூல ஊற்றிலிருந்து பொங்கிப் பிரவகிக்கும் சத்தியத்தின் ஒளி, அது.

நேரடியாகக் காண்பவர்களினதும், எழுத்துகள், வாய்மொழிப் பரிமாற்றங்கள் மூலம் அறிபவர்களினதும் கண்களில் ஜீவகளையைத் தோற்றுவித்து வாழ்வின் அறியாமை இருளில் வெகுண்டெழும் அழிவின் கிரணங்களை முற்றாகத் தகர்த்தெறியும் பண்பை முழுமையாகக் கொண்ட ஒளிவெள்ளம் அது. ஆன்மீகத்தின் நறுமணம் முழுவதுமாகக் கொண்ட நேர்வழியின் பவித்திரமான இழைகளால்தான் அது இறுக்கிக் கட்டப்பட்டுள்ளது. அந்த நேர்வழியில்தான் உலகின் ஒட்டுமொத்த வாழ்க்கை இலட்சியமும் இழுபட்டு நேர்பட்டுள்ளது.

இமாம் ஹுஸைன் எழுந்து நின்றார். சிறிய அந்தக் கூடாரத்தில் தன்னைச் சுற்றி அமர்ந்துள்ள குடும்பப் பெண்களையும்

குழந்தைகளையும் பரிதாபம் வழியும் தன் அன்புப் பார்வையால் தழுவினார்.

உலகத்தை நேர்வழிப்படுத்தத் தோன்றிய உத்தம நபியின் பரிசுத்தக் குடும்பத்தினர், அவலங்களுக்கும் அலைக்கழிப்புகளுக்கும் உள்ளாகிச் சடைவுற்றுத் துவண்டுள்ள நிகழ்காலக் குரூரம் அவரது கண்களில் பனித்துளியாகப் படர்ந்தது.

என்ன கொடூரம் இது!

ஒரு சமூகம் குறிக்கோளின்றி வாழலாமா? குறிக்கோளை இனங்காண்பித்துத் தந்தவருக்கு, அவரது குடும்பத்தினரைக் கொடுமைப்படுத்திக் கொலை செய்வதுதான் கைம்மாறா? உலகின் எந்தவொரு பாவச்செயலும் இதை விடவும் இழிவானதாக இருக்க முடியாது.

பெண்களின் கண்கள் சிந்திக் கொண்டிருப்பது வெறும் கண்ணீரல்ல என்பதை இமாம் ஹுஸைன் நன்கறிவார். முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால ஒழுக்கச் சூழல் குறித்த ஐயமும், அதன் வெளிப்பாட்டுச் சோகமும், அவர்கள் வடிக்கும் ஒவ்வொரு கண்ணீர்த்துளியின் ஈரத்தன்மையுடனும் இணைந்து இறுகியுள்ளன. அந்தக் கண்ணீரும் அவர்களது இறுதி முயற்சிதான். தமது பிள்ளைகளையும் சகோதரர்களையும் களத்தில் இறக்கி, அடக்குமுறையும் வழிகேடும் குமுறும் கொடூர அதிகாரத்தை நோக்கிய பலமான எதிர்க்குரலை ஏலவே அவர்கள் பதிவு செய்துவிட்டார்கள். அந்தப் பதிவு முயற்சியில் இழந்த தம் பிள்ளைக ளுக்காகவும், சகோதரர்களுக்காகவும் அவர்களது கண்கள் சிந்தியது, ஐயமற ஆனந்தக் கண்ணீர்தான்.

அங்கு நிலவிய துன்பியற் சூழல் இமாம் ஹுஸைனின் புனித நெஞ்சில் சோகமாய் மண்டியது. அவரைப் பொறுத்தவரை இப்போது எஞ்சியிருப்பது அவரது உயிர் மட்டுமே. அதையும் கொத்திச் சென்று குதறுவதற்கு, இரத்த வெறி பிடித்த வெற்றுக் கூட்டமொன்று, கூடாரத்திற்கு வெளியே பரந்துள்ள பாலைநில மணலில் பாதங்கள் அழுந்தக் காத்துக் கொண்டிருக்கிறது.

தான் ஷஹீதாகி விட்டால், இந்தப் பெண்களினதும், குழந்தைகளினதும் நிலை என்னவாகுமோ என்பதே இமாம் ஹுஸைனின் பிரதான கவலைக் களமாயிற்று. தன் கண்ணெதிரே, சிறுவர்களின் பிஞ்சு நெஞ்சங்களைத் தம் அம்பால் துளைத்தும், தாகத்தால் துடித்த குழந்தைகளின் குரல் வளையை அறுத்தும் தம் செயலின் கொடூரங்காட்டி அச்சுறுத்திய மிருக நடத்தையுடையவர்களிடமிருந்து, பெண்களுக்கான கண்ணியத்தையும் பாதுகாப்பையும் எப்படி எதிர்பார்க்க முடியும்!

குழப்பம் விளைவிக்கவோ, சமூகத்தைக் கூறுபோடவோ எண்ணி இமாம் ஹுஸைன் இங்கு வரவில்லை. அதிகாரத்தைக் கைப்பற்றி, அரண்மனையைக் கட்டியாள வேண்டுமென்ற குறுகிய உலகாசைகளெவையும் அவருக்கிருந்ததில்லை. அவரது நோக்கம் புனிதமானது; இலட்சியம் தூய்மையானது.

கூபாவாசிகள் தொடராக அனுப்பிக் கொண்டிருந்த அழைப்புக் கடிதங்கள் மட்டும் இமாம் ஹுஸைன் இங்கு வருவதற்குக் காரணமல்ல. முஸ்லிம் சமூகத்தின் தோற்றுவிப்பாளரான அவரது பாட்டனார், தீமைகளுக்கெதிரான புரட்சியை வாழ்க்கைக் கடமையெனப் பிரகடனப்படுத்தி விட்டுச் சென்றுள்ள போது, இமாம் ஹுஸைன் அநீதியைக் கண்டு மௌனம் சாதித்திருப்பதென்பது எப்படிச் சாத்தியமாகும்!

இஸ்லாமிய தலைமைத்துவம் என்பது புனிதமானது. வெறும் அதிர்ஷ்டமும் அதிகாரச் சூழ்ச்சியும் தலைமைத்துவக் களத்தில் இருள் விழுத்திக் கொண்டிருக்கும் போது, இறைத்தூதரின் பேரர், எவ்வித உறுத்தலுமின்றி எப்படி அதைப் பார்த்துக் கொண்டிருப்பார்!

சண்டையிட்டு அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமென இமாம் ஹுஸைன் நினைக்கவில்லை. இஸ்லாத்திற்கு முற்றிலும் விரோதமான உமையா ஆட்சியின் கொடூரத்திலிருந்து முஸ்லிம் சமூகத்தைப் பாதுகாப்பதும், அது பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே தோற்றுவிப்பதுமே அவரது பிரதான குறிக்கோள்களாயின.

ஆயுதங்களினால், அதிகார வெறியர்களின் செயலுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடலாம் என சிறுபிள்ளைத்தனமாய் எதிர்பார்ப்பதற்கு இமாம் ஹுஸைன் ஒன்றும் உலக விவகாரம் பற்றிப் பூரண அறிவில்லாதவர் அல்லர். முஸ்லிம் சமூகத்தின் புனிதத்துவம் பாதுகாக்கப்பட வேண்டும்; நடைமுறையிலுள்ள உமையா ஆட்சியின் சமய முரண்பாட்டுப் பண்புகளை உலகறியச் செய்ய வேண்டும். இல்லையெனில், அரண்மனை ஆடம்பரங்கள், மன்னராட்சி முறைமை, சமயக் கடமைகளின் புறக்கணிப்பு, பெண்மோகம், பாவச் செயல்களின் கட்டவிழ்ப்பு முதலானவையே முஸ்லிம் உலகின் பிரத்தியேக அடையாளங்களாய் நிறுவும் பெரும் அபாயச் சூழலொன்று ஏற்பட்டுவிடும் என்பதை இமாம் ஹுஸைன் தெளிவாகவே அறிந்திருந்தார். அந்த அபாயத்திலிருந்து முஸ்லிம் சமூகத்தை விடுவிக்கும் தூய நோக்குடனேயே தன் புரட்சியை அவர் மேற்கொண்டிருந்தார்.

சூரியன் மேற்கு நோக்கிச் சரியத் தொடங்கிற்று. சேமித்து வைத்த சொத்துகளை வெளிப்படுத்துவது போல், மணல் பரப்பு உஷ்ணத்தைக் கக்கிக் கொண் டிருந்தது. கூடாரத்திலிருந்து வெளிப்படுவதற்கு இமாம் ஹுஸைன் தயாரானர். முன்றலில் அவரது

குதிரை காத்திருந்தது. நிலைமைகளுக்கும் நிகழ்வுகளுக்கும் ஏற்பத் தன்னைக் கட்டமைத்துக் கொள்ளப் பயிற்சி பெற்றிருந்த அது, புழுதிப் படலம் வானுயரக் கிளம்பிச் செறிந்திருந்த கர்பலாத் திடலை உக்கிரமாகப் பார்த்தவாறே கனைத்துக் கொண்டிருந்தது.

இமாம் ஹுஸைன், தன் அருமைச் சகோதரி ஸைனபின் அருகில் வந்தார். கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடத் தன் உதடுகளைக் குவித்து நெற்றியில் பதித்த சகோதரியின் அன்பு முத்தத்தில் நெஞ்சம் இளகிக் கண்களை மூடிக் கொண்டார். தன் இதயத்தின் விதைக்குள் இருக்கின்ற இஸ்லாத்தின் கண்ணியத்தை, இறுக மூடிய விழிகளுள் மேலும் பத்திரப்படுத்திக் கொள்ள முயன்றார். உதிரும் ரோஜாவின் இரகசியத்தை வெளிப்படுத்தும் ஒளிமயமான பனித்துளிகள் போல், அவரது விழிநீர் மின்னிற்று.

தன் சகோதரியைப் பார்த்துச் சொன்னார்: “ஸைனப்! நான் புறப்படுகிறேன். இங்கிருந்து வெளியேறிச் செல்லும் நான், மீண்டும் இங்கு வருவதோ, மீண்டும் உங்களைச் சந்திப்பதோ சாத்தியப்படப் போவதில்லையென்பதை நான் நன்கறிவேன். அதனால் எனக்குப் பின் அஹ்லுல்பைத்தினரை வழிநடத்தும் பொறுப்பை உங்களிடம் ஒப்படைக்கிறேன். எனக்கென்று ஒரு கடமை இருக்கிறது. அநீதிக்கும், அராஜகத்துக்கும் எதிரான புனித பாதையில் என் பாதங்கள் பயணிக்கின்றன. அல்லாஹ்வின் மார்க்கத்தை அலட்சியப்படுத்தவும் அவமானப்படுத்தவும் விழையும் நயவஞ்சகக் கும்பலின் முகத்திரையைக் கிழித்து, அவர்களது மூர்க்கத்தனத்தையும், சமயச் சுவர்களுக்குப் பின்னாலான கொடுமைகளையும் உலகறியச் செய்யவும், இஸ்லாத்தின் புனிதத்துவம் இத்தகைய இழிவுகளை விட்டும் வெகுதூரமானது என்பதைப் பகிரங்கப்படுத்தவும் கருதியே நான் இங்கு வந்தேன். என் நோக்கம் நிறைவேறும் இறுதித் தருணம் இது. அல்லாஹ்வும் அவனது திருத்தூதரும் வழிமொழிந்து வாழ்த்துரைத்த பரிசுத்தப் பாதையில் நான் புறப்படுகிறேன். எமது தூய இலட்சியங்களை அல்லாஹ் நிறைவு செய்து தருவானாக!”

உறையுள் தூங்கிக் கொண்டிருந்த வாளை உருவியெடுத்துக் கொண்டு, கூடாரத்தின் வாயிலை விலக்கியவாறு வெளிப்பட்டார் இமாம் ஹுஸைன். அவரது பரிசுத்த தேகத்தின் பிரகாச வெள்ளம் கண்டு, சூரியன் விழிபிதுங்கி, கருமேகக் கூட்டங் களின் பின் பயந்து பதுங்கிற்று. வாளில் பட்டுத் தெறித்த ஒளிப்பிழம்பு, புழுதியை ஊடறுத்துப் பாய்ந்து சென்று எதிரிகளின் பயமுறுகும் கண் களினூடு நடுக்கமாய்ப் படிந்து அவர்களது இருள் விழுந்த மனச்சுவர்களை இறுகப் பிசைந்திற்று.

நடையை நிறுத்தித் திரும்பி, ஆங்காங்கே, மணலில் நட்டு வைக்கப்பட்டிருந்த தனது குழுவினரின் கூடாரங்களை நோக்கிப்

பார்வையை எறிந்தார் இமாம் ஹுஸைன். ஒவ்வொரு கூடாரமும் நேர்வழியின் வெளிச்சப் படிமங்களை உள்வாங்கித் திமிறும் கொழுத்த சுவர்க்கச் சோலையை அவருக்கு நினைவுபடுத்தின. சற்றுத் தொலைவிலுள்ள கர்பலாவின் கொதி மணலிலிருந்து விஷப் பாம்பின் தீநிழலாய் விஸ்வரூபமெடுத்து வரவுள்ள தன் இறப்பின் செய்தி, இந்தக் கூடாரங்களின் உள்ளக நிலையில் ஏற்படுத்தவிருக்கும் அவலம் தழுவிய சோகமாற்றம் பற்றிய சிந்தனை அவரை வாட்டிற்று. ஆனாலும், அந்த அவலம் பிற்காலத்தில் தோற்றுவிக்கவிருக்கும் சமூக விழிப்புணர்வுத் தீபங்களையெண்ணித் தன் கவலைகளை மனதுக்குள் புதைத்துக் கொண்டார் இமாம் ஹுஸைன்.

குதிரை அவரை நெருங்கிற்று. ஐம்பத்தேழு வயதிலும் இளமை முறுக்குக் குறையாத ஆரோக்கிய உடலைக் கொண்டிருந்த இமாம் ஹுஸைன், இலாவகமாகத் தாவிக் குதிரையில் ஏறினார். கண்களில் தீட்சண்யம் வழியக் கைகளைச் சூடேற்றினார். இடது கை, குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டிருக்க, வலது கையோ வாளைச் சுழற்றியது. தலைக்கு மேலே ஒவ்வொரு முறையும் சுழன்று வரும் போது, வாளின் நீண்ட கூர்மை காற்றைக் கிழித்துக் கனமான கீற்றொலியைக் கிளப்பிற்று.

பல்லாயிரக் கணக்காகத் திரண்டிருந்த போதும், ஆஜானுபாகுவான குதிரையிலேறி வாளைச் சுழற்றிக் கொண்டே புயலாய்ச் சீறிவரும் இமாம் ஹுஸைன் எனும் தனிமனித ஆளுமைச் சீற்றம் கண்டு, உமையாப் படை மிரண்டு பின்வாங்கிற்று.

இஸ்லாத்தை இழிவுபடுத்தத் தோன்றிய அந்த நயவஞ்சகக் கும்பலை நோக்கிச் சீறிக் கொண்டு செல்லும் இமாம் ஹுஸைனின் வீரச்செழுமையைக் கூடாரத்திலிருந்தவாறே பதட்டம் புடைக்கப் புடைக்கப் பார்த்துக் கொண்டிருந்தது பெண்கள் குழு. இமாம் ஹுஸைனின் வலிமையான கை இறுக்கிப் பிடித்துள்ள கூர்மையான வாள், அல்லாஹ்வுக்குப் பிடிக்காத சமய விரோதிகள் பலரின் தலைகளைத் துண்டாடி பூமியைச் சுத்தப்படுத்தப் போகிறது என்பது அவர்கள் எல்லோரும் நன்கறிந்ததுதான்.